Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 13 திங்கட்கிழமை (28.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 02

தலைவர் பிரபா இறுதி அறிவிப்பு

# மஹிந்தவுக்கு குறுகியகால அவகாசம்!



## நியாயமான தீர்வை முன்வைக்கத் தவறினால் அடுத்த ஆண்டில் சுயநிர்ணயப் போர் ஆரம்பம்


கிளிநொச்சி,நவம்பர்28


"எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்கவேண்டும். காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை,எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம் என்று தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிரகடனப்படுத்தியுள்ளார்.

தமிழீழ மக்களுக்கு நேற்றுமாலை அவர் ஆற்றிய மாவீரர் தின உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு குறுகிய கால அவகாசம் வழங்கிய தலைவர் பிரபாகரன் அதற்குள் நியாயமான தீர்வு ஒன்றைச் சிங்கள தேசம் முன்வைக்காவிட்டால் அடுத்த ஆண்டில் தேசச் சுதந்திரப் போராட்டத்தை தாம் தீவிரப்படுத்துவார் என்றும் அவர் அறிவித்தார்.

☞ தேசியத் தலைவரின் உரை முழுமையாக உள்ளே





வன்னியில் ஓரிடத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட நினைவுப் பந்தலில் தலைவர் பிரபாகரன் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்திய காட்சிகள்.

## உடனடியாகப் போர் என்ற தவறான அர்த்தம் வேண்டாம்

### லண்டன் மாவீரர் தின உரையில் பாலசிங்கம்

- லண்டனிலிருந்து றோஜன் -

லண்டன்,நவ.28

தமிழ் மக்களோடு சேர்ந்து சுயநிர்ணயத்துக்கான போரை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம் என்று தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர் தின உரையில் தெரிவித்திருப்பதை இன்னும் ஒரு மாத காலத்தில் போரில் குதிக்கப்போகிறார்கள் என்று தவறான அர்த்தத்தில் சில தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் திரிபுபடுத்தப் பார்க்கிறார்கள். அப்படியல்ல. மஹிந்த ராஜபக்ஷவின் நகர்வுகளைப் பொறுத்து போரை எப்போது தொடங்குவது என்பதை தலைவரே பின்னர் தீர்மானிப்பார். போரை ஆரம்பிப்பதற்கான அவகாசம் எதனையும் தலைவர் காலம் குறிப்பிட்டுக் கூறவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

லண்டன் அரோனா அரங்கில் நடைபெற்ற மாவீரர் தின விழாவில் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார். (16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடற்கரையில் கரும்புலிகளின் அணிவகுப்பு!

### கடலில் சுடர் ஏற்றினார் தளபதி சூசை

புதுக்குடியிருப்பு,நவ.28

மாவீரர் தினமான நேற்று முல்லைத்தீவுக் கடற்கரையில் கடற்புலிகளின் அணிவகுப்பு இடம்பெற்றது. கரையோர மக்கள் பலர் திரண்டிருக்க நேற்று மாலை முல்லைக் கடற்கரையில் இந்த அணிவகுப்பு இடம்பெற்றது.

தலைவர் பிரபாகரனின் உரை நிறைவடைந்ததும் தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கடலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் பிரதான சுடரை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கடற்கரையிலும் மாவீரர்களின் நினைவாக சுடர்கள் ஏற்றப்பட்டன. (த-353-405)

## புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமனம்?

கொழும்பு,நவ.28



அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பதவியேற்கவுள்ளார். இவர் மிக விரைவில் லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு 17 ஆவது இராணுவத் தளபதியாக நியமனம் பெறுவார் என்கின்றன கொழும்புச் செய்திகள்.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஓய்வுபெற்றதும் இந்தோனேஷியாவின் இராஜதந்திரப் பணி ஒன்றில் நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

இவர் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி இராணுவத் தளபதியாக நியமனம் பெற்றார். கடந்த வருடம் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி 55 வயதில் அவர் படையில் இருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும். ஆனால், இவ்வருடம் நவம்பர் மாதம் நான்காம் திகதி அவர் ஓய்வு பெறும் வண்ணம் அவரது பதவிக்காலம் ஒருவருடத்துக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துயிலும் இல்லங்களில் நேற்று உறவுகள் உயிர் உருக அஞ்சலி



*துயிலும் இல்லங்களிலிருந்து அலுவலகச் செய்தியாளர்கள்*

யாழ்ப்பாணம்,நவ.28

ஈழத் தமிழனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று மாவீரர் துயிலும் இல்லங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சமுத்திரம் போல் திரண்டிருந்தனர்.

தாம் வரித்துக்கொண்ட தளராத கொள்கைக்காக - தமது இனத்தின் சுதந்திர விடிவுக்காக -களமாடி வீரமரணம் எய்திய வீரப் புதல்வர்களுக்கு தமிழ் மக்கள் அலை கடலெனத் திரண்டு வந்து அஞ்சலி செய்தனர்.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், தெரிந்தவர்கள் தமது உறவுகள் துயில் கொள்கின்ற கல்லறைகள் மீதும் நினைவுக் கற்கள் மீதும் வீழ்ந்து புரண்டு கதறி அழுதனர். சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி பலரும் கல்லறையில் புரண்டு கதறிக் கண்ணீர் சிந்திய காட்சி நெஞ்சை உருக்குவதாக அமைந்திருந்தது.

**பிள்ளைகளுக்கு பிடித்த உணவை படைத்துக் கதறிய தாய்மார்!**

வாழ வேண்டிய வயதில் மண்ணுக்காக மாண்டுபோன தமது பிள்ளைகளின் பெயரைச் சொல்லி - அவர்களின் பழைய நினைவுகளைக் கூறி தாய்மார்கள் கதறியழ அதனைப் பார்த்து ஏனையோரும் கண்ணீர் மல்கினர். தங்களின் பிள்ளைச் செல்வங்கள் சிறுவயதில் என்ன வகையான உணவுகளை, தின்பண்டங்களை விரும்பி உண்டார்களோ அந்த உணவு வகைகளை வீட்டிலிருந்து தயாரித்துக்கொண்டு வந்த தாய்மாரும், உறவினர்களும் அவற்றை தமது பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் படைத்து வைத்து விட்டுப் புரண்டு அழுதனர்.

அந்தக் காட்சிகளைப் பார்த்து ஏனையோரும் விம்மினர்.

தாயக நேரம் 5.32 மணிக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் தின உரை சகல துயிலும் இல்லங்களிலும் ஒலி பரப்பப்பட்டது. தொடர்ந்து 6.05 மணிக்கு நினைவொலி எழுப்பப்பட்டது.

அதனையடுத்து, அனைத்து மாவீரர்களுக்குமாக 2 நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அகவணக்கத்தைத் தொடர்ந்து பொது ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. அதற்குப் பின்னர் துயிலும் இல்லப் பாடல் இசைக்கப்பட்டது. இந்தப் பாடலின்போது துயிலும் இல்லங்களில் நிலவிய நிசப்தத்தின் இடையே கேட்ட விம்மல் சத்தங்கள் நெஞ்சை பிசைவதாய் அமைந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள 5 மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நேற்றுமாலை முதல் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

**கோப்பாயில்..**

யாழ்.மாவட்டத்தில் பெரிய துயிலும் இல்லமான கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமாலை தொடக்கம் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

முன்னதாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றில் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந்த நிகழ்வு முடிவடைந்ததும் அவர்கள் துயிலும் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. துயிலும் இல்லத்தினுள் பிரவேசித்தவுடன் பெற்றோரும் உறவினர்களும் தத்தமது பிள்ளைகளின் கல்லறைகளைச் சூழ்ந்து கொண்டு அழுதனர்.

பொது ஈகச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார். தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளுக்குமான ஈகச்சுடர்கள் உறவினர்களால் ஏற்றப்பட்டன.

**கொடிகாமத்தில்...**

தென்மராட்சி, கொடிகாமத்தில் மாவீரர் துயிலும் இல்ல நிகழ்வுகள் கொட்டும் மழைக்கு மத்தியில் சிறப்பாக இடம்பெற்றது.

வன்னியில் இருந்து அழைத்துவரப்பட்ட மாவீரர் பெற்றோர்களும் தென்மராட்சியில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசை முழங்க திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இருந்து கொடிகாமம் நகர் பருத்தித்துறை வீதி ஊடாக மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

பொது ஈகச்சுடரினை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி மகேந்தி ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களால் சுடர் ஏற்றப்பட்டது. மழை இடைவிடாது பெய்து கொண்டிருந்தபோதும் மழையில் நனைந்தவாறு பொதுமக்கள் கல்லறைகளை கட்டியணைத்துக் கதறி அழுதனர்.

**எள்ளங்குளம்...**

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

மாவீரர்கள் பெற்றோரும், உரித்துடையோரும் எள்ளங்குளம் சந்தியில் இருந்து மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை முழங்க வடமராட்சிப் பிரதேச துணைப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் துயிலும் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

துயிலும் இல்லத்தில் பிரதான சுடரினைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

முன்னதாக மாவீரர்களின் பெற்றோர்களையும் உரித்துடையோரையும் கௌரவிக்கும் நிகழ்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

**உடுத்துறையில்...**

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் யாழ். மாவட்டக் கடற்புலிகளின் தளபதி ம.கலாத்தன் பொது ஈகச் சுடரினை ஏற்றினார். தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டன.


முன்னதாக மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் வத்திரான் பொதுமண்டபத்தில் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் அங்கிருந்து அவர்கள் 'பாண்ட்'வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் துயிலும் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

**சாட்டியில்...**

தீவகம் சாட்டிக் கடற்கரையில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதான சுடரினை யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றினார்.

அங்கும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர், பொதுமக்கள் பெரும் அளவில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். (த-7-12-86-180-31-182-70-78-410-72-75-173-15-11-17)







# துயிலும் இல்லம் செல்லாதோர் வீடுகளில் சுடரேற்றி அஞ்சலி!

யாழ்ப்பாணம் ,நவ.28

தாயகக் கனவோடு சாவினைத்தழுவிய மாவீரர்களின் நினைவாக குடாநாட்டில் நேற்று ஏராளமான மக்கள் தத்தமது வீடுகளில் சுடர்களை ஏற்றி அஞ்சலி செய்தன்ர்.

நேற்றுமாலை துயிலும் இல்லங்களில் மக்கள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுகூடி மாவீரர்களை நினைவுகூர்ந்தனர். துயிலும் இல்லங்களுக்குச் செல்லமுடியாதோர் தத்தமது வீடுகளில் மாவீரரை நினைவுகூரும் வகையில் ஈகச்சுடர்களை ஏற்றினர்.

வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், தொழில் மையங்கள், பொதுஇடங்களிலும் சுடர்கள் ஏற்றப்பட்டன.

இதேவேளை-

குடாநாடெங்கும் உள்ள ஏராளமான ஆலயங்களில் நேற்றுமாலை நினைவொலியும் எழுப்பப்பட்டது. (த-7-12-86-180-410)





# இளம்பரிதி, பாப்பா, தளபதி மகேந்தி நேற்று பிரதான சுடர் ஏற்ற யாழ்ப்பாணம் வந்தனர்

மாவீரர் தின நிகழ்வுகளில் முக்கிய அங்கமாக நேற்றுமாலை மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்ற சுடரேற்றும் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள், தளபதிகள் கலந்து கொண்டு பிரதான சுடர்களை ஏற்றினர்.

குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளை மேற்கொண்டு வந்த போராளிகள் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்ட பின்னர் நேற்றே பொறுப்பாளர்கள் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணைப் பொறுப்பாளர் எஸ்.கண்ணன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தென்மராட் சிப் பிரதேச தளபதி மகேந்தி ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்ற சுடரேற்றல் நிகழ்வில் அவர்கள் பங்கு பற்றி பிரதான சுடர்களை ஏற்றினர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பிரதான சுடரை ஏற்றிய இளம்பரிதி, இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்கள் தாமாக முன்வந்து மாவீரர் நாளை உணர்வு பூர்வமாக, கொண்டாடியமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மாவீரர் உயிரிலும் மேலாகப் போற்றப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் தலைவரின் விசேட ஏற்பாட்டில், ஒழுங்கமைப்பில் குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகள் சுடரேற்ற ஏற்பாடு செய்யப்பட்டது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்கள் இயல்பாகவே முன்வந்து உணர்ச்சியாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்ததைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். மாவீரர்களின் எண்ணங்களை சுமந்து விடிவை நோக்கி நிற்கிறார்கள் மக்கள். இதயசுத்தியுடன் மக்கள் நிகழ்வுகளில் பங்கேற்றதை நேரில் கண்டேன். இந்த பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன் - என்றார் அவர். (ஐ-3)




கோப்பாய் துயிலும் இல்லத்தில்....



படங்கள்: அற்புதன், பிரதீபன், பகீரதன், நேசன்.



# உலக வல்லரசுகளுடன் இரகசியக் கூட்டு வைத்து ஆயுதங்களைக் களைய சதி செய்தது ரணில் அரசு



## தேசியத் தலைவர் பிரபாவின் மாவீரர் தின உரை

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று வணக்கத்துக்குரிய நாள்.

சுயநல இன்பங்களைத் துறந்து பொதுநல இலட்சியத்திற்காகப் போராடி வாழ்ந்து - அந்தச் சத்திய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிய - உத்தமர்களை நாம் நினைவு கூரும் புனித நாள்.

இன்றைய நன்னாளில், அந்த மகத்தான மனிதப் பிறவிகளின் நினைவாக நாம் ஏற்றும் தீபங்களில், அந்த அக்கினி நாக்குகளின் அபூர்வ நடனத்தில், எமது மாவீரர்களின் சுதந்திரத் தாகம் அணையாத சுடராக ஒளி விட்டு எரிவதை நாம் எமது நெஞ்சில் நினைவு கொள்வோமாக.

சத்தியம் மீது கட்டப்பட்ட இலட்சியத்திற்காக மடிபவர்கள் என்றுமே சாவதில்லை. அவர்கள் ஒவ்வொருவருமே தனிமனித சரித்திரங்களாக என்றும் வாழ்வார்கள்.

மாவீரர்களே, உங்களது ஒப்பற்ற தியாக வரலாறுகளின் ஒன்றிணைப்பாகவே எமது தேசத்தின் வீர விடுதலைக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது மாவீரன், எனது பிரியமான தோழன் சத்தியநாதன் எனது மடியில் உயிர்நீத்து இன்றுடன் இருபத்துமூன்று ஆண்டுகளாகக் காலநதி ஓடிவிட்டது. இந்தக் கால நீட்சியிற் கட்டவிழ்ந்த போராட்ட வரலாற்றில் பதினேழாயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்று (17,903) மாவீரர் தேச விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பெருந்தொகைப் போராளிகளைவிடப் பலமடங்கு தொகையில் பொதுமக்களும் எதிரியாற் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தத்தில் எமது தேசத்தின் விடுதலைக்காக நாம் கொடுத்த உயிர்ப்பலி மிகப் பெரியது. அளப்பரியது.

தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தமிழ் மக்கள் புரிந்துள்ள மாபெரும் தியாகத்தை, அதன் ஆன்மீக மகத்துவத்தை, அதன் வரலாற்று முக்கியத்துவத்தைச் சிங்களத் தேசம் மட்டுமன்றிச் சர்வதேசச் சமூகமும் உணர்ந்துகொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகிறது.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்துகொள்ளவில்லை. புரிந்துகொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்துகொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

### மகாவம்ச மன உலகில் சிங்கள தேசம்

சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள். அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப்போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலை பற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்களத் தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்து போகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது. தென்னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்துவருகிறது.

### பேச்சுக்குச் செல்லும் நிர்ப்பந்த சூழல்

சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து, எமது உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்கவேண்டும் என உறுதிபூண்டிருந்த போதும் தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாகச் சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுகளிற் பங்குபற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பிரதேச வல்லரசான இந்தியாவின் தலையீடு ஒரு காலகட்டத்திலும், சர்வதேச நாடுகளின் அழுத்தம் இன்னொரு கட்டத்திலுமாகச் சமாதான முயற்சிகளில் எம்மை ஈடுபடச் செய்தன. அத்தோடு பேச்சுகளில் நாம் பங்குபற்றியதற்கு வேறு காரணங்களும் இருக்கவே செய்தன. தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது அமைப்புக்குச் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் பேச்சுவார்த்தை ஒரு சாதனமாக அமைந்தது. அதுமட்டுமன்றி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை உலகமயப்படுத்தி, சர்வதேசச் சமூகத்தின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக்

## விடுதலை அமைப்புக்கு சட்டரீதியான அங்கீகாரம் பெற பேச்சுகள் உதவின

கொள்வதற்கும் இது அவசியமாக இருந்தது. அடுத்ததாக நாம் ஆயுத வன்முறையிற் காதல்கொண்ட போர் வெறியர் அல்லர் என்பதையும் சமாதான மென்முறையில் நாம் பற்றுறுதி கொண்டவர்கள் என்பதையும் உலகுக்கு உணர்த்திக் காட்டவேண்டிய தேவையும் எழுந்தது.

இறுதியாக, எல்லாவற்றிலும் முக்கியமாகத் தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியற் கோரிக்கைகளை ஏற்று ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைச் சிங்கள இனவாத ஆட்சியாளர் முன்வைக்கப் போவதில்லை என்ற உண்மையைச் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவதும் எமது நோக்கமாக இருந்தது. இப்படியான குறிக்கோள்களுடனேயே நாம் பேச்சுகளிற் பங்குகொண்டோம்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும் எமது தேச விடுதலைப் போராட்டத்தில், வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில், நாம் போருக்கு ஓய்வு கொடுத்துச் சமாதானப் பேச்சுகளிற் பங்குபற்றினோம். எதிரியானவன் கபட நோக்கும் வஞ்சக நெஞ்சும் கொண்டவன் என்பது எமக்குத் தெரியும். அத்தோடு சமரசப் பேச்சுகளால் பயன் எதுவும் கிட்டப் போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப் போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதையும் நாம் நன்கு அறிவோம். இத்தனையையும் தெரிந்தும் நாம் நேர்மையுடனும் நேரிய நோக்குடனும் சமாதானப் பாதையில் பயணித்தோம். ஆயினும் நாம் மிகவும் விழிப்புடனும் விவேகத்துடனும் செயற்பட்டோம். சமாதானப் பயணத்தின் போது - சமரசப் பேச்சுகளின் போது சிக்கலான பல சவால்களையும் நெருக்குவாரங்களையும் நாம் எதிர்நோக்க நேரிட்டது.

எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பங்கம் ஏற்படும் வகையிற் பொறிகள் வைக்கப்பட்டன. சதிவலைகள் பின்னப்பட்டன. ஆனால் நாம் நிலைமையைப் புரிந்து சாதுரியமாகக் காய்களை நகர்த்தியதால் பொறிகளுக்குள் மாட்டிக் கொள்ளவுமில்லை சதிவலைப் பின்னல்களுக்குள் சிக்கிவிடவும் இல்லை. சிங்கள ஆட்சியாளரும் அவர்களுக்கு முண்டு கொடுத்து நின்ற வல்லரசுகளும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் எமது மக்களின் நலனுக்கும் விரோதமாகச் செயற்பட எத்தனித்த போதெல்லாம் எமது இயக்கம் அம்முயற்சிகளை வன்மையாக எதிர்த்து நின்றது. இந்தியத் தலையீடு நிகழ்ந்த காலத்தில், எமது மக்களின் நலனுக்கும் எமது தேசச் சுதந்திரப் போராட்டத்திற்கும் அச்சுறுத்தல் எழுந்தபோது இந்திய வல்லரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் எதிர்த்துப் போராடவும் நாம் துணிந்தோம் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

### சமாதான வழியில் கழிந்த நான்கு ஆண்டுகள்

எமது விடுதலை இயக்கம், திம்புவில் தொடங்கிப் பல்வேறு கட்டங்களில், பல்வேறு சமாதான முயற்சிகளிற் பங்குபற்றிய போதும் இம்முறையே எமது போராட்ட வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு நீண்ட கால இடைவெளியை - கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால இடைவெளியை - சமாதானத்திற்கு நாம் அர்ப்பணித்தோம். இந்த நீண்ட கால விசாலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குச் சமாதான வழியில் தீர்வு காண நாம் அயராது மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே அர்த்தமற்றுப்போயின.

இம்முறை நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள் சாராம்சத்தில் வித்தியாசமானவை, முக்கியத்துவமானவை. மூன்றாம் தரப்பு உலக நாடொன்றின் அனுசரணையில், சர்வதேசச் சமூகத்தின் கண்காணிப்பில் இந்தப் பேச்சுகள் நிகழ்ந்தன. முதலில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடனும் பின்னர் சந்திரிகாவின் ஆட்சிபீடத்துடனும் நிகழ்ந்த பேச்சுகளின்போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள், உடன்பாடுகள் எவையுமே செயல்வடிவம் பெறவில்லை. நாம் பொறுமையின் எல்லையைக் கடந்து சகிப்புத்தன்மையின் சிகரம்வரை சென்றோம். எத்தனையோ விடயங்களில் விட்டுக்கொடுத்து, சகல வாய்ப்புக்களையும் நாம் வழங்கியபோதும் சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடங்கள் எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்துவிட்டன.

### ரணில் அரசின் சூழ்ச்சிச் சதி

2001ஆம் ஆண்டு, டிசம்பர் 24ஆம் நாளன்று, நாமாகவே தன்னிச்சையாகப் போரை நிறுத்திச் சமாதானக் கதவுகளைத் திறந்துவிட்டோம். வன்னி மாநிலத்தை மீட்டெடுத்து, ஆனையிறவுப் படைத் தளத்தை துவம்சம் செய்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாக நிலைநிறுத்தி, பலத்தின் அத்திவாரத்தில் நின்றவாறே சிங்களத் தேசத்திற்கு நாம் நேசக் கரம் நீட்டினோம். நோர்வே அரசு நடுநிலை வகிக்க ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் உலகத் தலைநகர்களில் நிகழ்ந்த பேச்சுகள் பற்றி நான் இங்கு விபரித்துக்கூறத் தேவையில்லை. எமது மக்கள் எதிர்கொண்ட அவலமான வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளையுங்கூட ரணிலின் ஆட்சிபீடத்தால் தீர்த்துவைக்க முடியவில்லை. ரணிலின் அரசாங்கமானது பேச்சுகளை இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தியதோடு, உலக வல்லரசு நாடுகளுடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்து எமது விடுதலை இயக்கத்திடமிருந்து ஆயுதங்களைக் களைந்துவிடும் ஒரு சூழ்ச்சிகரச் சதிவலையைப் பின்னுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது. இந்தச் சதித்திட்டத்தின் ஒரு முக்கிய ஏற்பாடாகவே 2003ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் டோக்கியோ மாநாடு அரங்கேறவிருந்தது. இதனை அறிந்து கொண்ட நாம் டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரித்ததுடன் பேச்சுகளிலிருந்தும் விலகிக்கொண்டோம். சமாதான முயற்சியில் எதையுமே சாதிக்காது ரணிலின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதனையடுத்து, சமாதானத்திற்கு விரோதமான இனவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து புதிய அரசை அமைத்தார் சந்திரிகா. நாம் ஏற்கனவே முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் பற்றிப் பேசுவதற்கு எமது இயக்கம் இணக்கம் தெரிவித்தபோதும் சந்திரிகா அதற்கு இணங்காது காலத்தை இழுத்தடித்தார். இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, அரசியல் வெறுமைக்குள் காலம் ஓடியது. இந்த அரசியற் சூனியத்திற்குள், இந்த நிச்சயமற்ற வெறுமைக்குள் எம்மைச் சிக்கவைத்து, எமது விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பி மழுங்கடிப்பதே சிங்கள ஆட்சியாளரின் வஞ்சக நோக்கம் என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். இனித் தொடர்ந்தும் சமாதான மாயைக்குள் செயலற்று இருப்பது அபத்தம் என எண்ணிய நாம் எமது தேச விடுதலைப் போராட்டத்தைக் காலதாமதமின்றி முன்னெடுக்கத் தீர்மானித்தோம். அதற்கான செயறதிட்டத்தை நெறிப்படுத்திக்கொண்டிருந்த வேளையிலேயே, அதாவது சென்ற ஆண்டுக் கடைசியில், இயற்கையின் அந்தக் கோரத்தாண்டவம் நிகழ்ந்தது.

### திருப்பத்தை ஏற்படுத்திய பேரவலம்


திடீரென எவருமே எதிர்பாராத் தருணத்தில் இந்தப் பேரவலம் நிகழ்ந்தது. எமது தாயகப் பூமியின் கிழக்குக் கரையோரக் கிராமங்கள், குடியிருப்புகள் மீது சுனாமிப் பேரலைகள் தாக்கி என்றுமில்லாத பேரழிவுகளை ஏற்படுத்தின. இயற்கையின் இரக்கமற்ற இந்த ஊழிக் கூத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் இருபதினாயிரம் பேர் கொன்றொழிக்கப்பட்டனர். மூன்று லட்சம் பேர் வரை வீடுகள், சொத்துக்களை இழந்து அகதிகளாக அல்லற்பட்டனர். ஏற்கனவே யுத்தத்தினாற் சிதைந்து போயிருந்த தமிழர் தேசம்மீது இன்னொரு பேரழிவு ஏற்பட்டதால், சுமக்கமுடியாத துன்பப் பளுவைச் சுமக்க எமது மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உடனடியாகவே இப்பேரவலத்திற்கு முகங்கொடுக்க எமது விடுதலை இயக்கம் முடிவெடுத்தது. எமது இயக்கத்தின் படைத்துறைப் பிரிவுகளும் மற்றும் நிர்வாக, சமூக சேவைக் கட்டமைப்புகளும் களத்தில் இறங்கிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான, நிவாரணப் பணியில் ஈடுபட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தம் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டதால், பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கெனப் பெரும் தொகையில் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உலக நாடுகள் முன்வந்தன. அதேசமயம், எமது விடுதலை இயக்கத்துடன் கூட்டுச்சேர்ந்து, ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குச் சந்திரிகா அம்மையார் விருப்பம் தெரிவித்தார். பேரவலத்திற்கு ஆளாகி நிற்கும் தமிழ் பேசும் மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்க


(14ஆம் பக்கம் பார்க்க)




கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு நேற்றுக்காலை சென்ற பாடசாலை மாணவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியில் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. படையினரால் சேதமாக்கப்பட்ட மாவீரர்களின் கல்லறைகளின் சிதிலங்களுக்கும் மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டது.
(படங்கள்: பிரபா)



வடமராட்சி,எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஈகைச்சுடர் ஏற்றுவதையும், வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன், பாப்பா உட்படப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதையும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உறவுகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: சி.சுந்தரலிங்கம்)



கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தென்மராட்சித் தளபதி மகேந்தி ஈகைச்சுடர் ஏற்றுவதையும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், தளபதி மகேந்தி உட்படப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதையும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உறவுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.ரூபன், நா.தங்கன்)



விசுவமடு மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை போராளி ஞா.கருணன் ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து வடபகுதி துயிலும் இல்லங்களுக்குச் செல்வதற்காக அழைத்துவரப்பட்டு மேற்படி பாடசாலையில் தங்கவைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்களும் கொடிவணக்கம் செலுத்துவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.
(படங்கள்: மு.கந்தசாமி)



மன்னார் ஆண்டான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் சின்னத்தை முதலாவது படத்திலும், எழுச் சின்னத்தை வடிவமைத்த ஓவியர் ராஜனுக்கு கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் நினைவுப் பரிசளிப்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# குறைகூறும் உரிமை மேற்குலகுக்கு இல்லை

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மேற்குலகத் தலைமைக்கு அதிருப்தி தந்திருக்கின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மேற்குலகுடன் அதிகம் ஒத்துப்போகக்கூடிய ரணில் விக்கிரமசிங்க இத்தேர்தலில் ஓரங்கட்டப்பட, சீனா, இந்தியா போன்ற பிராந்திய வல்லாதிக்க நாடுகளின் செல்லப் பிள்ளையாக இருக்கக் கூடியவர் எனக் கருதப்படும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி இருக்கின்றார்.

இந்தக் கருத்தை உறுதிசெய்வதுபோல தாம் பதவியேற்று ஒரு வாரத்துக்குள்ளேயே நடந்து காட்டிக் கொண்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தாம் பதவியேற்ற கையோடு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலும், நாடாளுமன்றத்தில் தமது அரசு சார்பில் தாம் முன்வைத்த கொள்கை விளக்கப் பேருரையிலும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மேற்குலகப் பங்களிப்பை வெறும் துச்சமாக மதித்து உதாசீனம் செய்யும் அவரது போக்கு அப்பட்டமாக வெளிப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினையில் கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக அதிகம் பங்களித்துவரும் - அனுசரணை உதவி வழங்கிவரும் - நோர்வேயை பெயர் சுட்டவோ அல்லது அதன் பலன் எதிர்பாராத பணிக்கு நன்றி கூறவோ கூட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராக இல்லை.

இலங்கை இனப்பிரச்சினையிலும், உதவி வழங்கும் பணியிலும் இணைத் தலைமை வகிக்கும் நான்கு தரப்புகளும் - அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையும் - கூட இவ்வாறே இலங்கையின் புதிய அரசுத் தலைமையால் ஒதுக்கப்படும் நிலைமையே அதிகம் தென்படுகின்றது.

எல்லாம் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததால் ஏற்பட்ட நிலைமை. ரணில் ஜனாதிபதியாக வந்திருந்தால் இவ்வாறு இலங்கை விவகாரத்தில் மேற்குலகம் ஒரேயடியாக ஒதுக்கப்படும் நிலைமை வந்திருக்காது என்று கருதும் மேற்குலக ராஜதந்திரிகள், இந்தத் தேர்தல் முடிவுக்காகப் புலிகளைக் குற்றம் சுமத்துவதில் கண்ணாயிருக்கின்றார்கள் என்றும் தவல்கள் வெளியாகிவருகின்றன.

வடக்கு - கிழக்குத் தமிழர்களை ரணிலுக்கு வாக்களிக்க விடாமல் தடுத்தவர்கள் புலிகளே என்று கருதும் - கறுவும் - மேற்குலகம், இந்தச் செயற்பாட்டுக்காகப் புலிகள் தண்டிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வந்தால் அங்கு வரவேற்கப்படமாட்டார்கள் என்ற த்மது பழைய முடிவை, மேலும் விரிவுபடுத்தி, புலிகளுக்கு எதிராக முழு அளவில் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை சில தரப்புகளினால்அழுத்தமாக முன்வைக்கப் பட்டுவருகின்றது.

இலங்கை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழ், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் இலங்கை அரசின் நிர்வாக இயந்திரம் இன்னும் செயற்பட்டு வருகின்றது. புலிகளின் தீவிரக்கட்டுப்பாட்டுப் பிரதேசமான முல்லைத்தீவில் கூட இலங்கை அரசின் அரச அதிபர் முதல் கிராமசேவையாளர்கள் வரை அனைவரும் செயற்பட்டு வருகின்றனர்.

மேற்படி மேற்குலக அரசுகள் முதல் அவற்றின் தொண்டர் அமைப்புகள் வரை புலிகளின் பிரதேசத்தில் இயங்கும் இலங்கை அரசின் இந்த நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தான் தமது சேவைகளை அங்கு மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு அரச நிர்வாகம் புலிகளின் பிரதேசத்திலும் இருக்கும் போது - இயங்கும்போது - அதுவும் தமது நாட்டின் பகுதியே என்று கருதி இலங்கை அரசு செயற்படும்போது - அந்தப் பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு அந்தப் பிரதேசத்திலேயே தமது கண்காணிப்பின் கீழ் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமோ, மேற்குல நாடுகளோ வற்புறுத்தவில்லை.

இலங்கைத் தேர்தல் சட்டங்களின்படி, அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி மக்களுக்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதை அவை ஏற்றுக் கொண்டன. ஒருவகையில் அந்த முடிவை அங்கீகரித்தன என்று கூடச் சொல்லலாம். இத்தகைய நிலைமை காரணமாக சில இடங்களில் உள்ள வாக்காளர்கள் த்மது வாக்கை அளிப்பதாயின் நூறு மைல்களுக்கு மேல்கூடப் பயணம் செய்யவேண்டிய கட்டாயம் இருந்தது.

இத்தகைய வாக்காளர்களுக்கு இலங்கைச் சட்டப்படி அநீதி இழைக்கப்பட்டபோது பார்த்துக்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியம், இப்போது ஜனாதிபதித் தேர்தல் முடிவையும் இலங்கைச் சட்டபடி ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்.

இலங்கைச் சட்டமோ, இலங்கை தேர்தல் ஆணையாளரோ இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புலிகள் குழப்பினர் என்றோ, புலிகள் தமது மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தனர் என்றோ, அதனால் தேர்தல் முடிவு தலைகீழாகிவிட்டன என்றோ கூறவில்லை.

தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கோருவதும் இலங்கைச் சட்டங்களின் கீழ் ஒருவருக்கு உள்ள உரிமைதான்.

தமிழர் தாயக மக்களுக்கு வாக்களிப்பு வசதிகள் உரிய நியாயப்படி இவ்வளவு காலமும் செய்யப்படவில்லை. உதாரணத்துக்கு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலை நகரத்தில் கூட படையினரின் பெரும் கெடுபிடிக்கும் இராணுவ அடக்குவாரத்திற்கும் மத்தியில்தான் தேர்தல்கள் நடந்தன.

அவை எல்லாவற்றையும் சட்டப்படியானவை என ஏற்றுக் கொண்டுள்ள ஐரோப்பிய சமூகமும், மேற்குலகமும் இந்த ஜனாதிபதித் தேர்தலை வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேச மக்கள் பகிஷ்கரித்ததையும் இலங்கை சட்ட அமைப்புகள் சட்டமுரணானதாகக் கருதாதவரை அதையும் அப்படியே ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். அந்தப் பகிஷ்கரிப்புக்காக புலிகள் மீது குறை சொல்லவோ - குற்றம் காணவோ - கண்டனம் கூறவோ - அவற்றுக்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது என்பதுதான் நியாயமாகும்.

# மோ. சைக்கிள் செலுத்தும் வேளையில் குடை பிடிப்பதைத் தவிர்க்க அறிவுறுத்து

வலி.கிழக்கு,நவ.28

குடைபிடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிள் செலுத்துவது போக்குவரத்து விதிகளை மீறும் செயல். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்துவதன் மூலம் மழை காலத்தில் ஏற்படக்கூடிய வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம்.

இது விடயமாகப் பொலீஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் பலரும் ஒருகையில் குடை பிடித்தவாறு பயணம் செய்கின்றனர். இதனால், சீரான ஒழுங்குடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக, முக்கிய சந்திகளூடாகப் பயணிக்கும் போது வாகன நெரிசல் ஏற்படுவது வழமை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒருகையில் குடை பிடித்தவாறு மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் திடீரென மோட்டார் சைக்கிளை நிறுத்தமுடியாத நிலை எற்படலாம். இதன் மூலம் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அதேவேளை - மழையில் நனையக் கூடாது என்று கருதி குடைபிடித்தவாறு மோட்டார் சைக்கிள் செலுத்துவதன் மூலம், வீதியில் எதிரேவரும் வாகனங்களை இனங்காணமுடியாத நிலையும் ஏற்படலாம். குறிப்பாக, இரவு வேளைகளில் இதன்மூலம் அநேகமான விபத்துகள் ஏற்படுகின்றன.

எனவே, இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் மழைக்கவசம் அணிவது முக்கியமாகும். இதன் மூலம் விபத்தில் இருந்து தப்பிக்கொள்ளமுடியும்.

இதற்கிடையில் - மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து பயணம் செய்பவர்களும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். குறிப்பாக மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணிப்பவர்களாக பெண்களே உள்ளனர். இவர்களில் அநேகர் இன்னமும் தலைக்கவசம் அணியாமலே பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

விபத்து ஏற்படும் வேளைகளில் இவ்வாறு தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்யும் பெண்களே பெரும்பாலும் பலத்த காயங்க[illegible]க்கு உள்ளாக நேரிடுவதுடன், மரணத்[illegible]யும் எதிர்கொள்கின்றனர்.

அத்துடன், மோட்டார்[illegible]ளில் பின் இருக்கையில் அமர்ந்திரு[illegible] பயணம் செய்யும் பெண்கள், ஒருபக்[illegible]ாக அமர்ந்திருக்காமல் இரு பக்கங்கள[illegible] கால்களை வைத்துப் பயணம் செய[illegible] வேண்டும். இதன்மூலம் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் - என்று பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(எ-180)

# தொடர்ந்து பெய்த மழையால் பிரதான வீதிகள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ். குடாநாட்டில் அண்மைய நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழைகாரணமாக பிரதான வீதிகள் பலவும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

இதனால், பொதுமக்கள் போக்குவரத்துகளில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் யாழ். - கண்டி வீதி, யாழ். - ஊர்காவற்துறை வீதி, கே.கே.எஸ் வீதி உட் படப் பல பிரதான வீதிகள் வெள்ள நீர்தேங்கிச் சேதமடைந்துள்ளன.

அத்துடன் யாழ். - ஊர்காவற்றுறை பிரதான வீதியில், பண்ணைக் கடற் பகுதியில் ஒரு கரையில் இருந்து மறு கரைக்கு கடல் நீர் மேவிப்பாய்ந்ததில் வீதியில் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டுள்ளதுடன், வீதியும் பலத்த சேதமடைந்துள்ளது.

குறிப்பாக வீதியின் இரு மருங்குகளும் அரித்துச்செல்லப்பட்டுள்ளன.

இதற்கிடையில் ஏற்கனவே மேற்படி பிரதான வீதிகளில் இருந்த பள்ளங்கள் கடும் மழையை அடுத்து பாரிய குழிகளாக மாறியுள்ளன.

இதனால் வாகனங்களின் சாரதிகள், பொதுமக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வீதிகளில் உள்ள குழிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் இரவு நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள குழிகளுக்குள் விழுந்து விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கடும் மழைக்கு மத்தியில் வாகனச் சாரதிகள் சிலர் மிகவேகமாக வாகனங்களைச் செலுத்துவதனாலேயே இவ்வாறு விபத்துகள் இடம் பெறுவதாக யாழ்.போக்குவரத்துப் பொலீஸார் தெரிவித்தனர்.

மழைகாலங்களில் வேகத்தைக் குறைத்து அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறும் அவர்கள் வாகனச் சாரதிகளிடம் கோரியுள்ளனர். (எ-8)

# கொக்குவில் சந்திப் பகுதியில் சமூகச் சீர்கேடு செயற்பாடுகள்

## அதிகரித்துள்ளன என மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.28

கொக்குவில் சந்திப் பகுதியில் மாலை நேரங்களில் கூடும் இளைஞர்களால் சமூகச் சீர்கேடான நடவடிக்கைகள் இடம் பெறுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சந்திப் பகுதியில் அமைந்துள்ள ஓர் உணவகத்திற்கு வருகின்ற வயோதிபர்கள் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் -

- இவ்வாறான பல செயற்பாடுகளால் வியாபார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் [illegible]டைவதாகவும் - வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். குறைகளைச் சுட்டிக்காட்டினால் தாங்களும் தாக்கப்படலாம் என அப்பகுதியைச் சேர்ந்த பெரியோர்கள் அஞ்சுவ தாகத் தெரியவருகின்றது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகு[illegible]கள் எதிர்பார்க்கின்றனர்.

(3-14)

# காரைநகரில் பயிர்ச்செய்கை கால்நடைகளால் அழிகின்றது

## தடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

காரைநகர்,நவ.28

காரைநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பெரும்போக நெற்செய்கை கட்டாக்காலிக் கால்நடைகளால் அழிவடைந்துவருவதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தொகைப் பணச் செலவில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை கட்டாக்காலி கால்நடைகள் வகைதொகை இன்றி அழித்து வருவது குறித்து விவசாய சம்மேளனங்களோ, உரிய அதிகாரிகளோ எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது குறித்துத்தாம் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று விவசாயிகள் மேலும் கூறினர்.

கடந்த காலங்களில் விவசாய நிலங்களைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாண்டு இந்தப் பாதுகாப்பு வேலிகள் செப்பனிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கால்நடை வளர்ப்போர் பகல் வேளைகளில் கட்டிவளர்க்கும் தமது கால்நடைகளை இரவு வேளைகளில் அவிழ்த்து விடுகின்றனர்.

- இவ்வாறு விடப்படும் கால்நடைகளே இரவு வேளைகளில் பயிர்களை அழிக்கின்றன.

இந்தப் பயிரழிவைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-73)

## நாளை

**கார்த்திகை 14**
**செவ்வாய்க்கிழமை**
**29.11.2005**
**திதி: திரயோதசி**
**முன்னிரவு : 10.07 வரை**
**நட்சத்திரம் : சுவாதி**
**முன்னிரவு : 11.14 வரை**
**சுபநேரம்: 10.43 - 12.13**
**ராகுகாலம்: [illegible]3.13 - 04.43**
**(யாவும் பழைய நேரப்படி)**

## உதயவாக்கு

**எந்த ஒரு விடயத்திலும் பொறாமை, வெறுப்பு, துவேஷம் என்பவற்றை வளர்க்க வேண்டாம்.**

*- பாபா.*

# தொண்டைமானாறு கடற்பரப்பில் அபூர்வ நிகழ்வு

கரவெட்டி,ந[illegible]8

மேகம் நீரை உறிஞ்சும் அ[illegible] நிகழ்வு நேற்றுக் காலை 7.30 மணி[illegible] வில் தொண்டைமானாறு கடற்பரப்[illegible]ல் இடம்பெற்றது.

நீர்நிலைகளில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேலேசென்று கருமுகிலாவதே வழக்கம். ஆனால், மிக அபூர்வ நிகழ்வாக வளி மண்டலத்தில் ஏற்படும் அழுத்த ஏற்பாடுகள் காரணமாக திரவநிலையிலேயே நீர் முகிலையடைவது இடம்பெறுகிறது.

இது போன்ற ஒரு நிகழ்வே நேற்று தொண்டைமானாறு கடற்பரப்பில் இடம்பெற்றது. இதன்போது மிகப் பாரிய காளான் போன்று முகிலும் மேலே சென்ற நீரும் தோற்றமளித்தன என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-70)

# விமான நிலைய அபிவிருத்தித் திட்டம்


கொழும்பு,நவ.28

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை அபிவிருத்திப் பணி அடுத்தவருடம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டம் எதிர்வரும் 2008 ஆம் ஆண்டில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டக் காலப் பகுதியில் விமானங்களின் வரவு மற்றும் அகல்வு குறித்த நேர அட்டவணை சர்வதேச விமான நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிவில் விமானசேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கொழும்பு நகரத்திற்கான அதிவேக புகையிரதப் பாதை ஒன்று அமைக்கப் படவிருக்கின்றது. (ஒ-12)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
08.04.1927

மறைவு
29.10.2005

## அமரர் நன்னித்தம்பி தம்பு

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் நன்னித் தம்பி தம்பு அவர்கள் கடந்த 29.10.2005 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந் தவுடன் அன்னாரின் இல்லத்திற்கு வருகைதந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசு ரித்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபச் செய்தி தெரிவித்த வர்களுக்கும் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்க ளுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிறப்புற நடத்த உதவிய உற்றார், உறவி னர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் சுகவீன முற்றிருந்தபோது அவருக்கு உதவிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.11.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல் லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியை நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு. (43157)(51) T.P: 0777 382071 குடும்பத்தினர்.

# பணிநிலை வேண்டுகை

## செஞ்சோலை

கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டு கைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் சுயவிவரத்தினை 02.12.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலைகள்**

| | |
|---|---|
| 01. ஆசிரியர்கள்<br>1.தமிழ்<br>2.கணிதம்<br>3.விஞ்ஞானம்<br>4.வர்த்தகம்<br>5.நடனம்<br>6.சங்கீதம்<br>7.சமூகக்கல்வி | *01.க.பொ.த.(சா/த) தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி<br>02.க.பொ.த.(உ/த) துறைசார் பாடங்களில் திறமைச்சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.* |
| 8.நூலகர் | *- நூலக விஞ்ஞானச் சான்றிதழ்/முன்அனுபவம் விரும்பத்தக்கது* |
| 02.களஞ்சியப் பொறுப்பாளர் | *- க.பொ.த.(சா/த) வர்த்தகம், கணிதம் திறமைச்சித்தி அடைந்திருப்பதுடன் க.பொ.த.(உ/த) சித்தியடைந் திருத்தல் விரும்பத்தக்கது.* |
| 03.எழுதுநர் | *- க.பொ.த.(உ/த) தமிழ் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்* |
| 04.வரவேற்பாளர் | *- க.பொ.த.(உ/த) தேர்ச்சியடைந்திருப்பது விரும்பத் தக்கது. (வயதெல்லை 21இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இல.1,2,3)* |
| 05.வீட்டு மேற்பார்வையாளர் | *- க.பொ.த.(சா/த) தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும். (தாதியர் சேவை அனுபவம் உடையவர் களாக இருப்பின் விரும்பத்தக்கது) வயதெல்லை 28 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.* |
| 06.இரவுக் காவலாளி | *- தரம் 08 இற்கு மேல் கல்வி கற்றிருக்க வேண்டும். வயதெல்லை 45 இற்கு மேல் இருத்தல் வேண்டும்.* |

- ✱ குறிப்பு: இருப்பிட உணவு வசதிகள் உண்டு.
- ✱ விண்ணப்பம் செய்தவர்கள் சகல தகைமை ஆவணங்களுடனும் சமுகமளிக் கவும்.
- ✱ விண்ணப்பம் செய்யத் தாமதமானவர்கள் நேர்முக நாளில் சமுகமளிக்கவும்.
- ✱ ஊதியம் நிதித்துறையின் ஊதியத் திட்டத்தின்படி வழங்கப்படும்.
- ✱ நேர்காணல் நடைபெறும் இடம், திகதி, 04.12.2005 முற்பகல் 10 மணி, கிளிநொச்சி மத்தியகல்லூரி.
- ✱ வேண்டுகைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

**விளம்பர இலக்கம்: 2759**
**C/o. உதயன், யாழ்ப்பாணம்.**

(சி-46372) (21.42.46.17)


# NIIT

northumbria UNIVERSITY

# End of School days
# Beginning of Something better



ஆசியாவின் மிகப்பெரிய கணனிப்பயிற்சி நிறுவனமாக விளங்கும் NIIT உங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு சிறந்த கற்கைநெறிகளை வழங்குகின்றது. உலகில் 3891க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு 2.5 மில்லியன் மாணவர்களுக்கு கணனிக் கற்கைகளை வழங்கும் நாங்கள் உங்களையும் இணைத்து உங்கள் முன்னேற்றத்திற்கென கணனிக் கற்கைகளை சர்வதேச சான்றிதழ்களுடன் வழங்குகின்றோம்.

**Futurz**
Professional Diploma in Information Technology (DNIT)
(Direct Entry to the Final Year at B. Sc. (Hons) Degree at Northumbria

**CATS**
Ready for the next level?
VB.NET & ASP.NET
JAVA & J2EE
C++ & Linux
XML & DHTML

**SWIFT**
Certificate in MS Office XP
Certificate in Web Designing
Macromedia Flash
Macromedia Dreamweaver

**NIIT** Branches

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Anuradhapura | 025 4 581003 |
| Kurunegala | 037 4 691000 | Bambalapitiya | 011 4 519111 |
| Kandy | 081 4 470900 | Trincomalee | 026 2 227767 |
| Jaffna | 021 2 227250 | Tissamaharama | 047 4 328930 |

**NIIT**
347- 2/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**Most Advanced IT Curriculum Currently Available In Sri Lanka.**



புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை - சுருவில் சனசமூக நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சிவயோகராஜா மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரான யாழ். மாவட்ட செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், சுருவில் கிராம அலுவலர் ம.ஜெயதரன் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகளும் படத்தில் உள்ளனர். (எ)

# உலகவங்கி வீடமைப்புத்திட்டத்தை 80 கிராமங்களில் செயற்படுத்த முடிவு

யாழ்ப்பாணம்,நவ.28

உலக வங்கியின் இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்திற்கென யாழ். மாவட்டத்திலிருந்து 80 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பிரதேச செயலர்கள் கிராமத் தெரிவு விவரங்களை யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இது தொடர்பான சந்திப்பொன்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டப் பணிப்பளர் செ.பத்மநாதன், உதவிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், ஆழிப்பேரலை அனர்த்த செயற்பாட்டு மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்புத் தொடர்பாக அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:-

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தில் முதற்கட்டமாக ஆயிரத்து 635 வீடுகள் அமைக்கப்படுகின்றன. அவற்றில் ஆயிரத்து 500 வீடுகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படும். ஏனைய வீடுகள் ஜனவரி மாத முடிவிற்குள் கட்டிமுடிக்கப்படும்.

அடுத்த கட்டமாக 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கென பிரதேச செயலர்கள் மூலம் 80 கிராமங்கள் நிபந்தனைகளுக்கு அமைவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அடுத்த திட்டத்தில் கண்ணிவெடியகற்றப்பட்டு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்காக வீடுகளின் தொகை அதிகரிக்கப்படலாம். குறிப்பாக தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமரவுள்ள மக்களுக்கென வீடுகளின் தொகை அதிகரிக்கப்படும் - என்றார். (3-202)

## விசேட ஒன்றுகூடல்

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்தோருக்கு நடத்தப்படும் விசேட ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆடியபாதம் வீதியில் உள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க விடுதியில் நடைபெறவுள்ளது.

சகல வலுவிழந்தோர் சங்க உறுப்பினர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-204)

## தென்னை மீள் நடுகை

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் தென்னை மீள்நடுகைத் திட்டத்தினை சேவாலங்கா நிறுவனத்தினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் அப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்த 125 குடும்பங்களுக்கு அண்மையில் தலா ஆறு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(3-11[illegible])

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கோப்பாய்ப் பிரதேசத்தில் வயிற்றுளைவு நோய் தீவிரம்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் வயிற்றுளைவு நோயினால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளதாக தெரிவித்த அந்த அதிகாரி கொதித்தாறிய நீர், மலசலகூடப் பாவனை, உணவு சுத்தம், கிணறுகளுக்குக் குளோரின் இடல் போன்ற சுகாதாரப் பழக்கங்களை மக்கள் கைக்கொள்ள வேண்டும் என்றார்.

அந்தந்தப் பகுதிப் பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களை அணுகி அவர்கள் மூலம் கிணறுகளுக்கு குளோறின் இடும்படியும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.( 3-180)

# கால்நடை வைத்திய உப அலுவலகத்தை அச்சுவேலியில் நிறுவுமாறு கோரிக்கை

அச்சுவேலி,நவ.28

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்றை அச்சுவேலிப் பகுதியில் நிறுவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அச்சுவேலிப் பகுதிப் பண்ணையாளர்கள், கால்நடை வளர்ப்போர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் கோப்பாய் பூதர்மடத்தில் அமைந்துள்ளது.

இடைக்காடு, வளலாய், பத்தமேனி, அச்சுவேலி, ஆவரங்கால் மற்றும் புத்தூர், வாதரவத்தை, நவக்கிரி போன்ற பகுதிகளில் வசிக்கும் பண்ணையாளர்கள் பல மைல்தூரம் பயணம் செய்து தமது கால்நடைகள் மற்றும் கோழி, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கான சிகிச்சையைப் பெறவேண்டியுள்ளது. அதனால் பண்ணையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சாதாரணமாக கோழிகளுக்கு வழங்கப்படும் தடைமருந்துக் கலைவைகளையும் கோப்பாயில் பெற்றுக்கொண்டு வீடுதிரும்ப பல மணிநேரம் செல்வதால் அவை செயலிழந்துவிடுகின்றன என்றும் -

எனவே, மேற்படி பகுதி மக்களின் வசதியையும் மற்றும் தரமான வைத்திய சேவை உதவியையும் கருத்தில் கொண்டு அச்சுவேலியில் கால்நடை வைத்திய அதிகாரி உப அலுவலகத்தை நிறுவுமாறு பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

# மண்டைதீவில் அடைமழையால் நாற்றுமேடைகள் பலத்த சேதம்

மண்டைதீவு,நவ.28

அண்மையில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக மண்டைதீவு விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மழைகாரணமாக விவசாயிகளால் தமது சொந்தப் பாவனைக்கும் விற்பனைக்குமென அமைக்கப்பட்டிருந்த நாற்று மேடைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

வெள்ளம் கரைபுரண்டோடியதாலும் கடும் மழையினாலும் புகையிலை நாற்றுக்கள் வெள்ளத்துடன் அள்ளுண்டு போயுள்ளன.

நாற்றுமேடை அமைப்பதற்கும், விதைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் எரு, கோழி எரு போன்ற பசளைகளைப் பெறுவதற்கும் விவசாயிகள் முதலீடு செய்திருந்தமை தெரிந்ததே. (எ-88-203)

# காரைநகரில் இன்றும் நாளையும் நுளம்புவலைக்கு மருந்து தெளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.28

காரைநகர்ப் பிரதேசத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் நுளம்புவலைகளுக்கு 'பேமத்திரீன்' மருந்து தெளித்துக்கொடுக்கும் நடவடிக்கையை அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டுள்ளது.

மழைகாலத்தில் நுளம்புத்தொல்லை அதிகரித்துவருவதால், மக்களின் சுகாதார நலன்கருதி மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பணி இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் 10 மணிவரை தோப்புக்காடு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 10.30 மணிதொடக்கம் 12 மணிவரை ஊரி அன்ரசன் முன்பள்ளியிலும், 12.30 மணிமுதல் 2 மணிவரை காரைநகர் தெற்குப் பிரதேச சபை அலுவலகத்திலும், 2.30 மணி முதல் 3.30 மணிவரை களபூமி கிராம அலுவலர் அலுவலகத்திலும் -

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் 10 மணிவரை வாரிவளவு பிள்ளையார் கோவிலடியிலும் 10.30 மணிமுதல் 12 மணிவரை தங்கோடை சனசமூக நிலையத்திலும், 12.30 மணிமுதல் 2 மணிவரை காரைநகர் புதியவீதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்திலும் 2.30 மணிமுதல் 3.30 மணிவரை காரைநகர் அரசினர் வைத்தியசாலையிலும் - மருந்து தெளிக்கும் பணி நடைபெறும்.

இப்பிரதேச மக்கள் இதனைப் பயன்படுத்த வேண்டும் என அப்பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் கேட்டுள்ளார். (ஒ-15)

# உரும்பிராய் சந்திப் பகுதியில் இளைஞர் அட்டகாசம் அதிகரிப்பு

உரும்பிராய்,நவ.28

உரும்பிராய் சந்தியில் கூடிநின்று இளைஞர்கள் செய்யும் அட்டகாசத்தால் இவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

உரும்பிராய்ச்சந்தி பல பிரதேசங்களுக்கும் செல்லும் பிரதான வீதியாகும். தினமும் இவ்வீதியால் மாணவர்கள், வேலைக்குச் செல்வோர் எனப் பெருமளவானோர் பயணம் செய்கின்றனர்.

மாலை வேளைகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் அவ்வீதியால் செல்பவர்களை கேலிசெய்கிறார்கள். இதனால், வயது வித்தியாசமின்றிப் பலரும் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாகப் பெண்களும், மாணவிகளும் பெரும் சிரமங்கள் அடைவதைக் காணக்கூடியதாக உள்ளது.

உரியதரப்பினர் நடவடிக்கை எடுத்து இந்த இளைஞர்களின் அட்டகாசத்தை அடக்க மாட்டார்களா என இப்பகுதியைச் சேர்ந்தோர் அங்கலாய்க்கின்றனர். (3-204-154)

**உதயனில் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் வர்ண இணைப்பு இந்த வாரம் தவிர்க்கமுடியாத காரணங்களால் இன்று திங்கட்கிழமை சேர்க்கப்பட்டுள்ளது. அந்த வர்ண இணைப்பின் 12ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள அரசியல் கட்டுரையின் தொடர்ச்சி இன்றைய உதயனின் 9ஆம் பக்கத்தில் வெளியிடப்படுகிறது.**



கரவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திக்கென அபிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட கொடிவார ஆரம்ப விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் கரவெட்டிப் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் ஆ.ரகுநாதன், அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சி.பொன்னம்பலம், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரனுக்கு அபிவிருத்தி சபைத் தலைவர் கொடி அணிவிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படம்:- வடமராட்சிச் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

113, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில் கிணற்றுடன் கூடிய 5 பரப்பு 13 1/2 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777551431
(சி-46419)

### மணமகள் தேவை

U.K. இல் P.R உள்ள யாழ். இந்து கௌரவ குடும்பம், 1970 திருவாதிரை, 4 இல் செவ்வாய், கிரகபாவம் 22, 5' 6" உயரம், A/L படித்த, கம்பனியில் பணி புரியும் மணமகனுக்கு அழகான படித்த மண மகள் தேவை. மணமகன் யாழ்ப்பாணம் வந்துள்ளார். புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். சிவாலயா, இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், T.P.:0776528641 (43259)

யாழ். இந்து சைவ போசனம், வயது 31 பூர நட்சத்திரம் சொந்தமாகத் தொழில் புரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: T.P.: 0776636365
(43271)

### தவறிவிட்டது

மடத்தடி, உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த செல்வராஜா லோஜினி என்பவருடைய தே.அ.அட்டை (858581885V), விசேடஅடையாள அட்டை, நொக்கியா போன், சிறு தொகைப் பணம் என்பன அடங்கிய கைப்பை ஒன்று கடந்த 24.11.2005 வியாழக்கிழமை உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மினிபஸ்ஸினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். மடத்தடி உரும்பிராய் வடக்கு T.P.:0779152558 (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) (43243)

### வீடு வாடகைக்கு

கல்வியங்காடு ஞான பாஸ்கரா சனசமூக நிலையத்துக்கு அருகில் 3 அறைகள் கொண்ட சகல வசதிகளும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.:0773164320
(சி-46244)

## காரைநகர் கடலில் கடும் காற்று மீனவரின் வலைகள் அள்ளுண்டன

கடந்த திங்கட்கிழமை இரவு வீசிய கடுங் காற்று மற்றும் கடற்கொந்தளிப்புக் காரணமாக காரைநகர் வடக்குக் கடலில் வீசப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் சுமார் 40 மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -கடல் அலைகளினால் கடற்கரையில் இருந்த அணைகள் பலத்த சேதம் அடைந்துள்ளன என்றும்-

இவை விரைவில் செப்பனிடப்படாவிடின் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என் றும்-

மீனவர்களின் கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களை கரையில் தரிக்க முடியாத நிலை ஏற்படலாம் என்றும்- தெரிவிக்கப்பட்டது.
(எ-73)

## கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவாக நூல்

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் நினைவாக நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 41 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் முத்திரை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அன்றையதினம் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை வீரசிங்கம் மண்டபத்தில் அவரின் நினைவாக நூல் ஒன்றை வெளியிடும்.

இதேவேளை- அமரர் வீரசிங்கத்தின் 41 ஆவது நினைவு தின நிகழ்வுகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளன. (எ-17)

## துயர்பகிர்கின்றோம்

யா/கைதடி குருசாமி வித்தியாலய ஆசிரியர் திருமதி சோதீஸ்வரி நாகராசா அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் மா.கதிர்காமு** (கைதடி தெற்கு)

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.
(43253)(17-46-18)

## முதலாம் ஆண்டு நினைவில்..

தாய்மடியில் 10 - 02 - 1914



இறையடியில் 09 - 12 - 2004

### திருமதி கந்தையா மங்கையர்க்கரசி

*திதி: 28.11.2005*

*ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உயர்ந்தோர்*
*வழி நின்ற எம் தாயே!*
*இப்புவியில் உமைப் பிரிந்து ஓராண்டு சென்றதம்மா!*
*தப்பேதுமில்லாமல் வளர்த்தெடுத்த உம் மக்கள்!*
*தரணியிலே தவிப்பதுதான் தெரியலையோ எம் தாயே!*
*ஈடில்லா உம் சேவை இனி எமக்கு இல்லை அம்மா!*
*ஈந்திட்ட உம் அன்பும் எமக்கெங்கே கிடைக்குமம்மா!*
*'எப்பிறப்பில் உமைக் காண்பேன்' என்றுரைத்த உம் உரை கேட்டு*
*இப்பிறப்பில் கலங்குகின்றோம் உம் எழில் வதனம் நாம் நாடி!*

*முகவரி: 'சண்முகப்பிரியா'*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* *(43244)*

*எம் அன்னையின் ஆத்மா சாந்தி பெற நல்லூரானை இறைஞ்சி நிற்கும்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பொதுச்சபை அங்கத்தவர் சேர்த்தல்

*சாவகச்சேரி, கோயில் குடியிருப்பு*

சந்தனமுதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் பொதுச் சபை அங்கத்தவர் சேர்க்கப்படுகிறார்கள். விவரங்களுக்கு செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பரிபாலனசபை
சந்தன முதலிச்சிபுலம் *(43242)*
ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயம்.

*ப.பாலேந்திரா*
*செயலாளர்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை செல்வி ஞானமணி சின்னையா அவர்களின் சகோதரி

**செல்வி புனிதமணி சின்னையா**

அவர்கள் 29.10.2005 இல் இறைபதமெய்தியமையிட்டு துயரடைவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வட இந்து மகளிர் கல்லூரி.
(சி.46426)
(17-46-18)

## சித்திரமும் வடிவமைப்புமாணி

நுழைவுத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றது..

**IAT சித்திரப்பயிற்சி நிறுவனம்**

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
தொ.பேசி: 071 4168438
(43248)(17-46-18)

## சர்வதேச ஊனமுற்றோர் தினம் -2005

மேற்படி தினத்தை முன்னிட்டு 03.12.2005 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 47/2, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க விடுதியில் வலுவிழந்தோருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து மதியபோசனம் வழங்கப்படும். சகல வலுவிழந்தோர் சங்க உறுப்பினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

க.கோபாலகிருஷ்ணன்,
கௌரவ செயலாளர்.
(43258)
(17-46-18)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1953



மறைவு 09 - 12 - 2004

அரியாலை

### அமரர் சோமசுந்தரம் சோமலிங்கம்

(யாழ்.மாநகரசபை சுகாதார மேற்பார்வையாளர்)

(திதி ; 28.11.2005)

*அன்புடன் எமை அணைத்து*
*ஆதர வீந்த கோவே!*
*பொன்மொழி கூறி நாளும்*
*பாரினில் வாழ்ந்த சீரே!*
*இன்றுமை இழந்து காலம்*
*ஆண்டு ஒன்றான போதும்*
*நின்னெழில் முகமே காண*
*நாம் நினைத்துமே முடியவில்லை?*

இல.6, நடுத்தெரு ஒழுங்கை
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(43256)
(17-18-46)

மகள் வினோஜா,
மனைவி காலா.

## Hardware Workshop

அவுஸ்ரேலிய ComTIA A+ பாடவிதானம்
MCS மற்றும், ComTIA சான்றிதழ்கள்

**டிசம்பர் 3,4,10,11,17,18,24,31ஆம் திகதிகளில்**

10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். திறமையானோருக்கு Microsoftஇன் Computer Engineer, Ciscoஇன் CCNA, CCNP கற்கைக்கான புலமைப்பரிசில்

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் நேரில், MCS, 324, Palaly Road, Jaffna. பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்
20 - 09 - 1942

இறைவன் அடியில்
31 - 10 - 2005

### அமரர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

( ஓய்வுபெற்ற ஊழியர், மாநகரசபை)

*எனது சகோதரன் கணபதிப்பிள்ளை - கணேசலிங்கம் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் பல செய்தவர்களுக்கும், அன்னாரது இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்கள் அனைவருக்கும் எனது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அன்னாரது இல்லத்தில் 30.11.2005 புதன்கிழமை காலை நடைபெறும் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.*

தகவல்:
க.சரஸ்வதிப்பிள்ளை (சகோதரி)
(ஓய்வுபெற்ற ஆசிரியை).

18, கதிரவேலு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(43270)(17-46-18)

## Refnesh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு: சுதுமலை, மானிப்பாய்.
தொ.பே .:077-6279671, 077 3253104.
(43247)

## Lamico Laminating Rolls & Pouches

*சிறப்பான தரம்மிக்க லெமினேட்டிங் பவுச்சுகள் மற்றும் லெமினேட்டிங் ரோல்கள் (32 மைக்ரோன்) இலங்கையில் லெமினேட்டிங் தொழில்நுட்பத்தின் முன்னோடிகளிடம் கிடைக்கிறது.*

*வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாடிக்கையாளர்களின் கொழும்பிலுள்ள போக்குவரத்து முகவருக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.*

*தரம் குன்றிய பொருள்களை வாங்கி நஷ்டப்படுவதைத் தவிர்த்து நேரடியாக எங்களிடமே மொத்த விலையில் சிறந்த தெரிவை பெற்றுக்கொள்ளலாம்.*

**நேஷானிஸ் (பிரை) லிமிட்**
**251/1, கிருல வீதி, கொழும்பு - 05**
**தொலைபேசி: 2368695, 2502149**
(46407)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி சிவபாக்கியம்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்டு தற்போது சுதுமலையில் வசித்துவந்த திருமதி கந்தசாமி சிவபாக்கியம் கடந்த 24.11.2005 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் மகளும் வேலுப் பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மருமகளும் துரைராசா, சரஸ்வதி (காலஞ்சென்ற) சகோதரியும் சத்தியபாமா, நித்தி யானந்தன் (லண்டன்), சேதா (ஜேர்மனி), சிவானந்தன் (கனடா), லோகநாயகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவ செல்வம், பரிமளா, ரவீந்திரன், ரஞ்சிதமலர், தர்மராஜா ஆகியோரின் மாமியாரும் தர்ஷன், அனோஜா, கஜனா, நயனி, ஷர்மி, திவ்யா, ரேனுஷன், சங்கவி, சாரங்கன், ஜோதிகா, கவின், ஜனகன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இச்சாட்டி வைரவர் கோவிலடி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(43255)
(17-46-18)

*தகவல்:*
**வே.கந்தசாமி (கணவர்).**

# புதிய 'பட்ஜெட்'டுக்குப் பதிலாக உத்தேச மதிப்பீட்டு அறிக்கை

## டிசெம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றில்!

கொழும்பு, நவ.28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான புதிய அரசின் 2006ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு மதிப்பீட்டு அறிக்கை டிசெம்பர் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன், முன்னாள் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் இயல்பாகவே காலாவதியாகிவிட்டதால் அதற்கு மாற்றீடாக மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரான சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையை ஜனாதிபதியே தயாரிக்கவுள்ளார். ஜனாதிபதியினால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கை உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவுடன் டிசெம்பர் எட்டாம் திகதி மதிப்பீட்டு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-க)

# தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்.மாவட்ட தொழில்துறைத் திணைக்களத்தினரால் உலக வங்கியின் 'நெகார்ப்' திட்ட நிதி உதவியுடன் நடத்தப்படவுள்ள குறுகிய கால மேசன் தொழிற்பயிற்சிக்குப் பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நான்கு மாதகாலத்தைக் கொண்ட இப்பயிற்சி வகுப்பு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது.

பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் நாளொன்றுக்கு 250 ரூபா வீதம் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சி முடிவில் சான்றிதழும் சுயதொழில் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலுநர்கள் நேர்முகத்தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆர்வமுள்ளவர்கள் டிசெம்பர் 2ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை மாவட்ட அலுவலர், தொழில்துறைத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கிலப் பாடநெறியைக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் பளைப் பிரதேசத்தில் நடத்தப்பட்டுவரும் கணனிப் பயிற்சி நிலையத்தில் பணிபுரிவதற்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஓ-203-405)

# மீண்டும் தவறு விடுகிறது....

(வர்ண இணைப்புத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடையத் தொடங்கியது.

1981 இல் அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல் இடம்பெற்ற வேளையில் அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், குறிப்பாக யாழ்.பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் கொழும்பிலுள்ள அரசு மீது அதுவரை தமிழ்மக்கள் கொண்டிருந்த அவநம்பிக்கையை மேலும் தீவிரமாக்கியது.

1983 இல் 13 ராணுவத்தினர் தமிழ்ப் போராளிகளால் கொல்லப்பட்டதன் பிரதிபலனாகத் தென்பகுதியில் தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகள் தலைதூக்கின. இதில் பல தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவ்வேளையில் அரசமைப்பில் கொண்டுவரப்பட்ட 6 ஆவது திருத்தம் மூலம் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என சத்தியப் பிரமாணம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு சத்தியப் பிரமாணம் மேற்கொள்ள மறுத்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேர்ந்தது. இதைத் தொடர்ந்து தமிழ்மக்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாமற்போயிற்று.

1983 இல் இந்நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து இந்நாட்டு இனப்பிரச்சினையில் வெளிநாடுகளின் தலையீடுகள் ஆரம்பமாகத் தொடங்கின. குறிப்பாக அயல்நாடான இந்தியாவின் தலையீடுகள் அதிகரித்தன எனலாம்.

### இந்தியத் தலையீடு

உண்மையில் 1983 ஆம் ஆண்டிற்கு முன்னரே இந்திய அரசு வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியது. இந்திய அரசு இவ்வாறு செயற்பட்டதற்கான காரணம் 1977 இல் இந்நாட்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி இந்திய விரோத வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தமையேயாகும். எவ்வாறேனும் 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து இந்திய அரசு இந்நாட்டு இனப்பிரச்சினையில் நேரடியாகவே தலையிட ஆரம்பித்தது. இந்தத் தலையீட்டின் முக்கிய கட்டமாக 1987 ஜூலை மாதம் இந்திய அரசுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையே இலங்கை - இந்திய உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்பாட்டின் பிரதிபலனே மாகாண சபை முறையாகும். ஸ்ரீலங்காவில் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக மாகாண சபைகளின் கீழ் அதிகாரங்களைப் பரவலாக்குவதே அதன் நோக்கமாகும். இது ஒற்றை ஆட்சி முறையின் கீழ் அதிகாரங்களைப் பரவலாக்கும் முறை என எவரும் வாதிடக்கூடும். ஆனால், ஓரளவுக்கு சமஷ்டி முறையை ஒத்ததே ஆகும். இருப்பினும் மாகாண சபைகள் மூலம் அதிகாரங்களைப் பகிரும் நடவடிக்கைக்கு ஒரு வாசல் திறக்கப்பட்டது எனலாம். உண்மையில் இந்நாட்டுச் சிறுபான்மையினருக்கு மாகாண சபை முறையால் எந்தவொரு பயனும் கிட்டவில்லை. 1988-1990 கால கட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபை செயற்பட்டது. மாகாண சபையின் ஆட்சியை ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக் கைப்பற்றியது. ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகள் இந்த அதிகாரப் பகிர்வை நிராகரித்தே வந்தனர்.

ஸ்ரீலங்காவில் அதிகாரப் பகிர்வுச் செயற்பாடுகள் மாகாண சபைகள் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1990 இல் அப்போதைய ஜனாதிபதியால் வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது. இதன்பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறையானது சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் மட்டுமே செயற்படுகிறது. எனவே, தீர்வுக்கான முயற்சிகைநழுவிவிட்டதாகவே கொள்ளமுடியும்.

1980களில் ஆரம்பித்த இந்த உள்நாட்டுப் போரானது 2001 ஆம் ஆண்டுவரை (விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த காலங்கள் தவிர) நீடித்தது

இந்த யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பாரிய அளவில் சொத்துக்களுக்கு சேதமேற்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்திற்கும் வெற்றியையோ தோல்வியையோ தராத – எந்தத் தரப்பிற்கும் உண்மையான வெற்றி கிட்டாத போராக இது அமைந்தது. ஆரம்பத்தில் வடக்கு - கிழக்குப் பிரதேச வரையறைக் குள் இடம்பெற்ற இந்த யுத்தமானது 1990 ஆம் ஆண்டு வடக்கு, தெற்கே சிங்களப் பிர தேசங்களையும் நோக்கி விரிவடைந்தது. இதனால் இந்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை ஆட்டங்காணத் தொடங்கியது. நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி கேள்விக் குறியானது.

இந்நாட்டின் இனப்பிரச்சினையின் நேரடிப் பிரதிபலனான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக நீண்டகாலமாகவே அரசியல் தீர்வு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இந்த அரசியல் தீர்வை எட்டுவதாயின் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உருவாக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 1994 இல் சந்திரிகா இந்த முயற்சியை ஆரம்பித்தார். விடுதலைப் புலிகள் முற்றுமுழுதான பயங்கரவாத அமைப்பு - அந்த அமைப்புடன் எதுவிதப் பேச்சுகளையும் மேற்கொள்ளக்கூடாது எனக்கூறும் இனவாதிகளின் கருத்தானது ஒருபக்கக் கருத்தாகும். விடுதலைப் புலிகளது கொள்கைகள் ஓரளவு பாசிசத் தன்மைகளைக்கொண்டவை என்பது உண்மையாயினும் அந்த அமைப்பு தெளிவாகவே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் அரசியல் அமைப்பாகும். இக்காரணத்தாலேயே அந்த அமைப்பின் செயற்பாடுகள் விரிவடைந்துள்ளன. குறிப்பாக சமாதான வழிக்கு வரும் போது யுத்தத்தில் முக்கிய தரப்பான விடுதலைப் புலிகளுடன் நேரடியாக இணக்கத்தைக் காண்பது அத்தியாவசியமானதாகும். அவ்வாறான உடன்பாடின்றி தற்காலிகமாகவேனும் சமாதானத்தை மேற்கொள்ள முடியாது. குறிப்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சிறுபான்மை மக்களின் அமைப்புடன் விரிவான பேச்சுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

### சமாதானப் பேச்சு

1994 இல் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆரம்பித்த சமாதானப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தன. சமாதானம் தொடர்பாக அரசால் தீர்க்கமான திட்டங்கள் எவையும் அப்போது முன்வைக்கப்படாமையே இந்தத் தோல்விக்குக் காரணமாகும். இதன் காரணமாக மீண்டும் யுத்தம் ஆரம்பித்தது. யுத்தம் தீவிரமானதுடன் தென்பகுதியிலும் சிங்களவர்கள் மத்தியில் அதன் பிரதிபலிப்பைக் காணமுடிந்தது. குறிப்பாக இலங்கை மத்திய வங்கி, கட்டுநாயக்க விமான நிலையம், கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற தென்பகுதி பொருளாதார நிலையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். மறுபுறத்தில் முல்லைத்தீவு, ஆனையிறவு போன்ற வடக்கிலுள்ள பாரிய ராணுவத் தளங்களை அழிப்பதில் அந்த அமைப்பு வெற்றிகண்டது. இவ்வாறான நிலையில் ஒப்பீட்டு ரீதியில் நோக்கும்போது ஸ்ரீலங்கா அரசு தோல்வியையே தழுவியது. எனவேதான் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது.

இந்தச் சமாதானப் பேச்சுகள் 2002 ஆம் ஆண்டே யதார்த்தமானது. 2001 ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப்பெற்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசு விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுகளை மேற்கொண்டதன் மூலம் சமாதான முயற்சிகள் நடைமுறையில் சாத்தியமாயின. குறிப் பாக அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம் யுத்தத்திற்கு ஓய்வு கிடைத்தது. இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்திற்கு முடிவு வரும் அறிகுறி தென்பட்டது. இதன் மூலம் வடக்கில் மாத்திரமன்றித் தென்பகுதியிலும் மக்களின் வாழ்க்கை சுமுகமான நிலைக்கு வந்தது.

இவ்விதமாக 1990களில் இருந்து ஆரம்பமான சமாதானம் தொடர்பான கருத்துகளை 2000 ஆம் ஆண்டளவில் பொ.ஐ.முன்னணி மாத்திரமன்றி ஐ.தே.கட்சியும் ஏற்றுக்கொண்டது. இந்த நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் ஏற்றுக் கொண்ட கொள்கையாக உருவெடுத்துள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுவதே பொருத்தமானதாகும். இந்தக் கருத்திற்கு விடுதலைப் புலிகள் உடன்படவில்லை. மறுபுறத்தில் தென்பகுதியில் சிங்கள இனவாத அமைப்புகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற அமைப்புகளும் உடன்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஆரம்பித்த சமாதானப் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகளும் தமிழீழக் கோரிக்கைக்குப் பதிலாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திற்கு இணங்கியுள்ளனர். யுத்தநிறுத்த உடன்பாடானது சமாதானப் பேச்சுகளை மேற்கொள்ள வசதியாகவே எட்டப்பட்டது. அரசியல் தீர்வினைக் காணவே சமாதானப் பேச்சுகள் தேவைப்பட்டன. சமாதானப் பேச்சுகளின் போது இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டம் முன் வைக்கப்பட்டதையடுத்து சமாதானப் பேச்சுகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன. நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் 2004 ஏப்ரல் மாதத்தில் சமாதான முயற்சிகளை எதிர்த்த ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்து ஆட்சிக்கு வந்த பொ.ஐ.முன்னணி அரசு சமாதான நடவடிக்கைகளை முற்றிலுமாகக் கருத்தில் கொள்ளாது சிங்கள மக்களிடையே மீண்டும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான கருத்துகளை முன்வைத்து மீண்டும் ஒற்றையாட்சிக்கோட்பாட்டை நிலை நிறுத்த முயற்சித்து வருகிறது இதனால் மீண்டும் தவறு விடுகிறது ஸ்ரீலங்கா அரசுத் தலைமை. ✱

சிங்கள மூலம்: டெரன்ஸ் புரசிங்க
தமிழில்: கஜனி


## வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் - NEHRP

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை உலக வங்கியின் நிதியீட்டத்தில் மீள்நிர்மாணம் செய்யப்படுகின்றது.

இரண்டாவது கட்டம் - 2006 ஆரம்பமாகின்றது.

அதற்காக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களைத் தெரிவுசெய்யும் பணிகள் ஆரம்பமாகி விட்டன.

★ உங்கள் கிராமம் யுத்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, மக்கள் இடம் பெயர்ந்து சென்று மீளவும் குடியேறியுள்ளனரா?

★ அவ்வாறாயின் உங்கள் கிராமம் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா?

★ தகவல் அறிய கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலருடன் தொடர்புகொள்ளவும்.

(சி/46378) (24-18-19) தொடர்ந்து விவரம் அறிய நாளைய பத்திரிகையை வாசியுங்கள்.



# பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் மாணவனும், **விஜயரெட்ணம் கலா** தம்பதியரின் புதல்வனுமாகிய **வி.வாகீசன் அவர்கள்** 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் 4 ஆம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 10 ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவருக்குக் கல்வி புகட்டிய அதிபருக்கும், வகுப்பாசிரியை திருமதி கிருபாநிதி சந்திரராஜா அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா,
அம்மப்பா, அப்பம்மா, மாமாமார்,
மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.

57, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (43236)
மு.சண்முகம் (அம்மப்பா).

## செயலமர்வு

ஜோப்பாய், நவ.28

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் மாகாணப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பௌதிகவியல் செய்முறை குறித்த வதிவிட செயலமர்வை நடத்தவுள்ளது.

அடுத்தமாதம் 6ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலய ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய வலய ஆசிரியர்களுக்குமான செயலமர்வு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

(எ-72)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தவர்களான **திரு-திருமதி பிரகாஷ் வினோஜா தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் பி.பிரவின்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.11.2005) திங்கட்கிழமை கோண்டாவிலிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பிரவீனை கோண்டாவில் பிள்ளையார் அருளால் பலகலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.





**பி.பிரவீன்**

கங்கா போட்டோ அன் டிஜிற்றல் வீடியோ,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கே.பிரகாஷ்
(அப்பா).

# வல்வெட்டித்துறை நகரசபை
## பொது அறிவித்தல்

யுத்தத்தினால் சேதமடைந்த நவீன சந்தை கீழ் மாடியிலுள்ள கடைகள் புனரமைக்கப்பட்டு விரைவில் அவை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இக்கடைகளை முன்னர் குத்தகைக்குப் பெற்றிருந்தவர்கள் 26.12.2005 ஆம் திகதிக்கு முன்னர் நகர சபையுடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தமது குத்தகையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இக்காலப் பகுதிக்குள் இதனை உறுதிப்படுத்திக் கொள்ளாதவர்களது கடைகள் சபையினால் பொறுப்பேற்கப்பட்டு மீள வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

நா. தம்பிராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
22.11.2005
(சி-46410)

## எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வலி.கிழக்கு நவ.28

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராம மட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கும் பாடசாலையில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் எயிட்ஸ் நோயிலிருந்து பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கருத்துரைகளை வழங்கிவருகின்றனர்.

(எ-180-204)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 29.10.2005 அன்று அமரத்துவமடைந்த

## புனிதமணி சின்னையா

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், கடிதமூலமாகவும், தந்தி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் நேரில் கலந்து அஞ்சலி செலுத்தி, ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (28.11.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பத்திரகாளிகோயில் வீதி,
பருத்தித்துறை.
(சி.46425) குடும்பத்தினர்.


# கல்வியாண்டு 2006 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



**A/L** தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் **(Admission)** உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள **EDEXCEL, UK** வழங்கும் **BTEC HND** தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் **B.Sc (Hons)** பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏனையவற்றையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது **HND** தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.



கிருஷாந்தஸ் ஜுட்
சுண்டிக்குளி

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனாகிய நான் **A/L** 2004 கணிதப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதி தவறவிடப்பட்ட நிலையில் எனது வாழ்க்கைக்கு இந்த **IIS** நிறுவனம் நம்பிக்கையான ஒரு வழியைக்காட்டியது. தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் மாணவனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். **Edexcel International, UK** நிறுவனத்தின் **HND** கற்கைநெறியைப் பயின்றுவரும் நான் இக் கற்கைநெறியின் அங்கீகாரம் தொடர்பாக திருப்தி யடைந்துள்ளேன். இவ்வாண்டில பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி, வேலை வாய்ப்பு எனப் பல்வேறு சந்தர்ப்பங்கள் தேடி வருவதையிட்டு எனக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நானும் எனது பெற்றோரும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

# IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


## புற்றுநோய் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் ஆலோசனை நிபுணர் டாக்டர் ந.ஜெயக்குமாரன் 'விவசாய இரசாயனங்களின் விளைவினால் புற்றுநோய்' என்னும் பொருளில் நிகழ்த்தும் கருத்துரை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், ஆர்வலர்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-204)

# ஈரவிழிகளுடன் 25 ஆவது பிறந்த நாள் நினைவு



## அமரர் சிவசுப்பிரமணியம் மயூரன்

(பழைய மாணவன் - யாழ்/இந்துக் கல்லூரி, உயிரியற் பிரிவு 1999)

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இன்று உனது அகவை ஈர்பத்து ஐந்து ஐயா!
ஆண்டாண்டு சென்றாலும் அழியாது உன்நினைவு.....

''சுந்தரபவனம்''
காங்கேசன்துறைவீதி,
கொக்குவில்.

உன்பிரிவால் துடித்து வாழும்:
அப்பா, அம்மா, தம்பிமார்.

(43237)

# தேவை

## பதவி : ஓட்டோ ஓட்டுநர்

**தகைமை :**

1) அடிப்படைக் கல்வியுடன் ஓட்டோ ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்வேண்டும்.
2) தேவை ஏற்படின் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் ஆற்றல் உடையவராகவும் இருத்தல்வேண்டும்.

**வேதனம் :** பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பம் :** சுயவிவரத்துடன் 05.12.2005 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். எதிர்பார்க்கப்படும் வேதனத்தையும் குறிப்பிடுக.

**குறிப்பு :** தெரிவு செய்யப்படுபவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

செயலாளர்,
அறவழிப்போராட்டக்குழு,
த.பெ.இல.2,
சாவகச்சேரி.

(43239) NVDAG



## வடமராட்சி தெற்கு -மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## மீள்கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி 05.12.2005 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். நண்பகல் 12 மணிக்கு கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும்.

**வேலையின் பெயர் : தேவரையாளி, வதிரி குழாய்க் கிணறு அமைத்தல்**

**கேள்விப் படிவம் பெறும் திகதி : 02.12.2005, பிற்பகல் 2 மணிவரை.**

**கேள்வி வைப்பு : ரூபா 1000.00**

**படிவக்கட்டணம் : ரூபா 575/=VATவரியுடன்**

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர்.

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
கரவெட்டி.

(C/46411)



## விசேட மலிவு விற்பனை

### மாரிகாலத்துக்கான விசேட தள்ளுபடி 10%

* சிறுவர்களுக்கேற்ற றெயின்கோட் வகைகள்
* பெரியோர்களுக்கான றெயின்கோட், யக்கட் வகைகள்
* சகல வயதினருக்குமான சுவெற்றர் வகைகள்
* பலதரப்பட்ட குடை வகைகள்
* நுளம்பு வலைகள்

மழை காலத்துக்கென விசேடமாகத் தருவிக்கப்பட்ட மேற்காணும் பொருள்கள் கொழும்பு விலையைவிட 10% விலைக்கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. சொற்ப கையிருப்பே உள்ளதால் ஏமாற்றத்தை தவிர்க்க உடனே நீங்கள் நாட வேண்டிய இடம்.



## வாணி ரெக்ஸ்

கிளை :
நவீன சந்தை (உட்புறம்)
இல.11, சாவகச்சேரி.

இல.81, பெரியகடை
யாழ்ப்பாணம்.

(43081)



## நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்

kit

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?

வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.
மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட




## SRI MURUGAN
### TELE COMMUNICATION AGENCY POST OFFICE

303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 222 5392.
E.mail : srimurugan@eureka.lk

இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.

(C-46357)(45-15)


# ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், நவ.28

தோப்பு வயல் பாடசாலைக் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தோப்பு ப.நோ.கூ சங்க பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளன.

தோப்பு வயல் பாடசாலைக் குழுத் தலைவர் இ.விக்னேஸ்வரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் சி.சிவதட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி. நவநீதம் ஜெகதீசன், யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ. சிறில் ஆகியோர் கலந்துகொள்வர்.

தொடர்ந்து தையல் பயிற்சி நிலைய திறப்பு, திட்ட அறிமுகம் சிறப்பு உரைகள் என்பன இடம்பெறும். (204)

# அச்சுவேலி கூட்டுறவுச் சங்கத்தால் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

அச்சுவேலி,நவ.28

அச்சுவேலி பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைப்பரப்பில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்த கௌரவிப்பு விழாவில் சங்கப் பரப்பில் வசிக்கும் நூற்றுக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மாவீரர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் பெற்றோருக்கு பரிசுப்பொருள்களும் வழங்கப்பட்டன. (எ-11)

# ஆயுள்வேத வைத்தியசாலையை தொடர்ந்து இயக்கக் கோரிக்கை

நவாலி,நவ.28

மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் இயங்கி வரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் தற்போது வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

ஏனைய நாள்களில் பண்டத்தரிப்பில் அண்மையில் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட வைத்தியசாலைக்கு இங்குள்ள வைத்திய அதிகாரியும் ஊழியர்களும் செல்கின்றனர். இதனையடுத்தே இப்புதிய நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், வழமைபோல் இவ்வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிடுகிறது.

பல வருடங்களாகத் தொடர்ந்து இயங்கி வந்த இந்த வைத்தியசாலையைச் சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் தொடர்ந்து செயற்பட வைக்கவேண்டுமென்றும் -

பண்டத்தரிப்பில் உள்ள வைத்திய சாலைக்கு வேறு வைத்தியரையும் ஊழியரையும் நியமனம் செய்யவேண்டும் என்றும் - பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-100)

# ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. சாதாரண மாணவருக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.28

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் இலவசக் கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்குகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 5 தினங்கள் திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி ஆங்கிலம், இரண்டாம் திகதி தமிழ், மூன்றாம் திகதி கணிதம், 5 ஆம் திகதி சமூகக் கல்வி, 6ஆம் திகதி விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும்.

மாணவர்களை இதில் பங்கு கொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-204)


## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## கணக்காளர் பதவிக்கான வெற்றிடங்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா)

வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி மாவட்ட காரியாலயங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

**வயதெல்லை**

நேர்முகப் பரீட்சையின் போது 55 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விவரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்கவேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 14.12.2005ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்கவேண்டும். அரச திணைக்களம்/ அரசகூட்டுத்தாபனம்/ சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**சம்பளம்**

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000.12.26ஆம் திகதிய இல. 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

**கணக்காளர் பதவி II/I**
**(03 பதவி வெற்றிடங்கள் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா)**

**கடமைகளும் பொறுப்புகளும்**

நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதி கட்டுப்பாடு திட்டமிடுதல், வரவு -செலவுத் திட்டத்தை தயாரித்தல், கணக்குகளைச் சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கு ஏதுவாகத் தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.

**தேவையான தகைமையும் அனுபவமும்**

- 5 வருட அனுபவத்துடன் அரசாங்க கணக்காளர் சேவையில் உரிமத்தவர் அல்லது அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் சேவையில் உரிமத்தவராக இருத்தல்வேண்டும். அத்துடன்-
- இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சை அல்லது உரிமத்தவர் பரீட்சை அல்லது-
- ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது-
- ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது-
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது-
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது-
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது-
- ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி.

த.லங்காநேசன்
திட்டப்பணிப்பாளர்,
நிகொட் திட்ட காரியாலயம்,
55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை.

(C/46363)



## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## 2006 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

ஆதன மீள் மதிப்புக்கமைவாக, இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதனவரித் தொகைகளே 2006 ஆம் ஆண்டிற்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தப்படற்பாலதென வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாதன வரித்தொகைகள் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, ஜூன் மாதம் 30, செப்ரெம்பர் மாதம் 30, டிசம்பர் மாதம் 31 (இத்திகதிகள் விடுமுறை நாளாகவரின் நேர்முந்திய வேலை நாள்) ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டிற்கு ஒரு தடவை செலுத்தப்படவேண்டும். இவை ஆண்டு தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும், காலாண்டிற்குரிய வரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரித் தொகைகளுக்கும் பற்றாணைச் செலவு அறவிடப்படும். இப்பற்றாணைச் செலவு வெற்றுக் காணிகளுக்கும் குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15% ஆகவும் ஏனைய ஆதனங்களுக்கு 20% ஆகவும் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட வரிமதிப்பிற்கு எதிர்சொல்லுதல் ஏதும் இருப்பின் அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் விளம்பரமாகும் திகதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப்பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால், குடியிருப்போரின் பொருள்கள் நடுகட்டல் செய்யப்படுமென்பதனை குடியிருப்போர் கவனிக்கவேண்டும். வாடகைக்காரர்கள் தாங்கள் குடியிருக்கும் ஆதனத்திற்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையில் குறைத்துக்கொள்ளலாம்.

நா.தம்பிராசா
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
21.11.2005

(C/46409)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

28.11.2005




வல்வெட்டித்துறை, தெணியம்பை வீதியைச் சேர்ந்த ரமணலிங்கம் ஜெயந்தி தம்பதியரின் அருந்தவப் புதல்வி ரம்மியா தனது முதலாவது பிறந்தநாளை இன்று(28.11.2005) திங்கட்கிழமை சிங்கப்பூரிலுள்ள தனது இல்லத் தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை வல்வை முத்துமாரியம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங் களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்தும் அன்புள்ளங்கள் அப்பா, அம்மா, திருகோணமலையைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, அத்தை, பெரியப்பாமார், சித்தப்பாமார், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெத்தையா, அம்மம்மா, சித்தி, பெரியம்மா, பெரியப்பா, தாத்தா, மாமி, மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்:
இ.சி.தனபாலசிங்கம்
சுஜீவா வீடியோ விஷன்
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

(42829)

## கருத்தரங்கு

தென்மராட்சி,நவ28

காசநோய் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

யாழ்.மார்புநோய் சிகிச்சைப்பிரிவு பொறுப்பாளர் டாக்டர் சி.யமுனானந்தா தலைமையிலான குழுவினர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

ஆஸ்பத்திரி நோயாளர்கள், ஊழியர்கள் உட்பட பலர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

காசநோய் ஏற்படுவதைக் தடுக்கும் முறை பற்றிய குறுந்திரைப் படமும் காண்பிக்கப்பட்டது.

(எ-117)

## வயோதிபர்களுக்கு உடுபுடைவைகள்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் தங்கியுள்ள வயோதிபர்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமம் இந்த உடுபுடை வைகளை வழங்கியது.ஆண்களுக்குத் தேவையான வேட்டிகள், சால்வைகள், சாரங்களும, பெண்களுக்குத் தேவையான சேலைகளும், இருபாலாருக்கும் துவாய்கள், படுக்கைவிரிப்புகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-173)



# யாழ்ப்பாணத்தில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப் பயிற்சி

## இலவச அறிமுக உரை

நாள்:- 28.11.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.
பயிற்சி நாள்கள் :-29.11.2005 முதல் 04.12.2005 வரை
பயிற்சி நேரம் :-மாலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
மேலும் தொடர்புகளுக்கு:- 077 9059549 - 077 9059544 - 077 6160214
அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!
www.artofliving.org www.srisriravishankar.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சங்கரப்பிள்ளை தெய்வானை

புலோலி தெற்கு, புற்றளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை தெய்வானை கடந்த 25.11.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் இராசகுலசிங்கம், குணபாலசிங்கம், புஸ்பராணி, இன்பராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் வசந்தி, ஜானகி, காலஞ்சென்ற சிறிஸ்கந்தன், குகதாசன் ஆகியோரின் மாமியாரும், சங்கீதா, சௌமியா, வினோதினி, உமாபதி, நித்தியன், சோபனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை(29.11.2005) செவ்வாய்க்கிழமை காலை 7மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அவறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*மாவில் வீதி,*
*புலோலி தெற்கு, புலோலி* (சி.46428) (17-46)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி வாசினி - ஜீவராஜா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வாசினி (பாமினி) நேற்று (27.11.2005) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் திரு.திருமதி சிவசோதிராஜா (குட்டி) ஆகியோரின் அன்பு மருமகளும் ஜீவராஜாவின் அன்பு மனைவியும் றொபிஷன், நிருஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனராசா(மோகன்), சிறிநாதன் (கனடா), பத்மநாதன் (பிரான்ஸ்), ரகுநாதன் (கனடா),சாந்தினிதேவி, சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திலகவதி, வனிதா (கனடா), மஞ்சுளா (பிரான்ஸ்), சுமதி( கனடா), செந்தில்நாதன் (ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரி), மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சண்முகராஜா (பிரான்ஸ்), துரைவீரசிங்கம் (காந்தன்) ஆகியோரின் அன்பு மருமகளும் திருமதி சுப்பிரமணியம் - விமலராணி, திருமதி சின்னராசா - யோகேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞான வைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (43277) (17-46)

தகவல்:
**மோகனராசா (மோகன்)**

## தம்பிராசா அருமைநாயகம்

*(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)*



கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தாவடி பாடசாலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்பொழுது அம்மன் கோயிலடி சூராவத்தை சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா அருமைநாயகம் அவர்கள் 26.11.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலச்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யேந்தகுமார் (லண்டன்), நாகசயந்தினி (கோண்டாவில் மேற்கு, உபஅஞ்சல் அதிபர்), லோகேஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தமுருகன் (லண்டன்), கோமதி (கனடா), யேந்தாதேவி, சந்திரகுமார் (நெதர்லாண்ட்), றோகினி (மாவீரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி (லண்டன்), காலம் சென்ற சிறிகாந்தன் மற்றும் சந்திரா (சுவிஸ்), மல்லிகா, கணேசலிங்கம் (சுவிஸ்), சிவகுமார், சௌமியா (நெதர்லாண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலம்சென்றவர்களான இரத்தினம்மா, மனோன்மணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ரதனிகா, கேசனா, சந்தோஸ், கேசிகா, சோபிகா, சிவடக்சன், லோஜிகா, சகானா, ஆராதனா, பானுசா, சரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயிலடி, சூராவத்தை,*
*சுன்னாகம். தொ.பே. 071 2565202* (43276) (17-46)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## புங்குடுதீவில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

புங்குடுதீவு- நயினாதீவு பல நோ. கூ. சங்கமும் புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சி பேரவையும் இணைந்து நடத்திய மாவீரர் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சங்க உபதலைவர் க.இராஜரெட்ணம் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரையும் தமிழீழத் தேசியக் கொடியையும் கரும்புலி ரங்கனின் தாயார் க.குணசீலி ஏற்றினார்.தொடர்ந்து ஈகச்சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்களும் புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சி பேரவைச் செயலாளர் க.அஜந்தன், கிராம சேவையாளர் மி.வினாயகமூர்த்தி ஆகியோரும் ஏற்றினர்.தொடர்ந்து மாவீரரின் தந்தை இராசலிங்கம் மாவீரர் பொதுப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். பின்னர் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு தென்னங்கன்றும் குத்துவிளக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஒ-ரி)

## யாழ்.கரையோர வடிகால்களில் நுளம்புப் பெருக்கம்

அரியாலை, நவ 28

பலத்த மழையை அடுத்து யாழ். கரையோரப் பகுதிகளில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குருநகர், பாஷையூர், நாவந்துறை, கொட்டடி, கொழும்புத்துறை, ஈச்சமோட்டை போன்ற பகுதிகளில் இவ்வாறு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது என்றும் - மேற்படி பகுதிகளில் உள்ள கழிவு நீர் ஓடும் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டவில்லை. இதனால் அவற்றில் கழிவு நீர் தேங்கியுள்ளது. இது குடம்பிகளின் பெருக்கம் அதிகரிக்கக் காரணம் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். நுளம்புப் பெருக்கம் காரண மாக தொற்று நோய்கள் ஏற்படவாய்ப்பு உள் ளது என்றும் - அவர்கள் கூறினார். எனவே, நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (எ-17)

## மர ஏல விற்பனை

மல்லாகம் பழைய நீதி மன்றவளவில் வீழ்ந்து கிடக்கும் பாரிய மலை வேம்பு மரத்தின் அடிமரம் 01.12.2005 அன்று காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் மரத்தை எடுப்பவர் முழுத்தொகையையும் உடனடியாக பணமாகச் செலுத்தவேண்டும்.

**மு.க.விஜயரட்ணம்**
பிரதேச முகாமையாளர்,
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2349

(சி 46427) (17-46)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 732 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 25-11-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5828512-5842460 |

வெற்றி இலக்கங்கள்
**25 31 47 52**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு ரூபா. 15,54,100/- வெல்லப்பட்டுள்ளது
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 2,99,895 | 10/- | 29,98,950/- |
| 2.இலக்கங்கள் | 29,319 | 20/- | 5,50,640/- |
| 1.இல லக்கினம் | 29,073 | 30/- | 8,16,030/- |
| 2.இல லக்கினம் | 2,511 | 100/- | 2,51,100/- |
| 3.இலக்கங்கள் | 729 | 500/- | 3,64,500/- |
| 3.இல லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 15,54,100/- | 15,54,100/- |
| | | மொத்தம் | 72,35,320/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 82,87,670/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 87,05,070/-
தொடர் இல. 4880760 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 5834690-7-02 |
| மாத்தறை | 5830655-2-65 |
| திருகோணமலை | 5828968-8-51 |
| களுத்துறை | 5841016-5-82 |
| கேகாலை | 5836659-7-36 |

## 26.11.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300725221 இலிருந்து 300739902 வரை

சீட்டிழுப்பு இல. 1662

வெற்றி எண்கள்
**07 17 28 70**
சுப்பர் எண் **11**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,58,55,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,58,55,650/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 24 | 5,000/- | 1,20,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 397 | 1,000/- | 3,97,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,301 | 500/- | 6,50,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,047 | 40/- | 7,61,880/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,050 | 20/- | 3,61,000/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,70,604 | 10/- | 27,06,040/- |
| | | மொத்தம் | 69,96,420/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 74,96,420/- |

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,65,78,800/-**

தொடர் இல. 200784683 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 30 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 300729345-5-67 |
| மாத்தறை | 300726983-8-25 |
| அநுராதபுரம் | 300731154-7-66 |
| கேகாலை | 300735709-2-47 |
| பொலன்னறுவை | 300727880-0-14 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# விசுவமடுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு; இதனால் அங்கு இலையான்கள் பெருக்கம்

பரந்தன்,நவ.28

விசுவமடு பொதுச்சந்தை சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவருகிறது. இதனால், அங்கு இலையான்களின் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. அதன்மூலம் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தையின் கழிவுப் பொருள்கள் சந்தையின் உட்புறத்தில் குவிக்கப்பட்டுள்ளன. பல மாதங்களாகியும் இக் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமையால் இலையான் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

கழிவுப் பொருள்களைச் சேர்த்து வைத்திருக்கும் இடத்திற்கு அருகிலேயே பழங்கள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் இறைச்சி, மீன் போன்றனவும் இதன் அருகில் வைத்தே விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால், தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இப்பகுதி மக்களை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-352-202)

## கூட்டம்

புதுக்குடியிருப்பு, நவ.28

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்காலத்தில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை 9 மணியளவில் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டம் நாளைமறுதினம் 30ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-353-203)

## மாவீரரின் பெற்றோருக்கு தென்னங்கன்று விநியோகம்

ஒட்டுசுட்டான்,நவ.28

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மன்னார் மாவட்ட மாவீரர்களின் பெற்றோருக்குத் தென்னங்கன்றுகள் வழங்கியுள்ளது.

கடந்த 22ஆம் திகதி சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் 68 மாவீரர்களின் பெற்றோர்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (த-341-202)

## முள்ளியவளை மகப்பேற்று விடுதிக்கு வைத்தியர் நியமனம்

முள்ளியவளை மத்திய மருத்துவ மகப்பேற்று விடுதிக்குப் புதிதாக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளளார்.

கடந்த 15ஆம் திகதி முதல் வைத்திய கலாநிதி செ.லவன் நியமனம் பெற்றுள்ளார். கடந்த பல வருடங்களாகப் பதிவு வைத்திய அதிகாரி ஒருவரே இந்த நிலையத்தில் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (த- 353-202)

## சுனாமி பாதித்த மீனவருக்குப் படகுகள்

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு ஒரு தொகுதிப் படகுகள் வழங்கும் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்றது.

சமாசத் தலைவர் அ.மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை பீற்றர் கலந்து கொண்டு பயனாளிகளுக்குப் படகுகளை சம்பிரதாய பூர்வமாக வழங்கினார்.

கரித்தாஸ், கியூடெக் நிறுவனத்தால் சுமார் 200 படகுகளும் 50 வெளியிணைப்பு இயந்திரங்களும் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. (ஒ - 353-202)

# வலயங்கட்டு கிராமத்தில் பொதுமண்டபம் இல்லை

## நிகழ்வுகளை நடத்துவதற்குச் சிரமம்

பரந்தன்,நவ.28

மடுப்பிரதேசத்திலுள்ள வலயங்கட்டு கிராமத்தில் பொதுமண்டபம் இல்லை. இதனால், அப்பகுதி பொதுமக்கள் ஒன்றுகூடல் மற்றும் நிகழ்வுகளை நடத்துவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

இக்கிராமத்தில் உள்ள முன்பள்ளிக் கட்டடம் ஒன்றிலேயே அவர்களது ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதனால், முன்பள்ளி மாணவர்களுக்கான வகுப்புகளை நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

மக்களின் பொது நிகழ்வுகளுக்காக முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்துவதால், அவர்களின் கல்வி பாதிப்படைகிறது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, எவராவது முன்வந்து இக்கிராம மக்களுக்கென ஒரு பொதுமண்டபத்தை அமைத்துத்தரவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(த-352-203)

## கருத்தூட்டல்

கிளிநொச்சி,நவ.28

தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலில் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார உத்தியோகத்தர்களும் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகளின் பிரதேச இணைப்பாளர்களும் இணைந்து மழைக்காலத் தொற்றுநோய் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வுகளை நடத்திவருகின்றனர்.

மாத்தளன் இடைத்தங்கல் முகாமில் கடந்த வாரம் கருத்தூட்டல் நிகழ்வு நடத்தப்பட்டது.

அத்துடன், குடிதண்ணீர்க் கிணறுகளுக்கும் பாவனைக் கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட்டது.

(த-202)

* * *

கிளிநொச்சி, நவ.28

மன்னார் மாவட்ட திலீபன் மருத்துவ சேவையினரும் தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து மழை காலத்தொற்று நோயில் இருந்து விடுபடல் தொடர்பான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த 24 ஆம் திகதி விழிப்புணர்வுக் கருத்தரங்கு மன்னார் வட்டக் கண்டல் அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

இதில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(204)

# அகதி முகாம்களில் சுகாதாரம் குறித்து விழிப்பை ஏற்படுத்துமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,நவ.28

சுகாதார உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது மழைகாலம் என்பதால் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தொற்றுநோய்கள் பரவுவதற்கு சாத்தியங்கள் உள்ளன. எனவே இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் கடமைபுரிந்து தொற்று நோய்கள் பரவக்கூடிய வழிகளைத்தடைசெய்ய உதவுமாறு சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் கோரப்பட்டுள்ளது. (த-341-202)




## விசுவமடுவில் தேசியத் தலைவர் பிறந்த நாள் நிகழ்வு

விசுவமடு நவ. 28

விசுவமடு பிரதேச பெண்கள் அமைப்புக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்டாவளைக்கோட்ட மகளிர் அமைப்பும் இணைந்து விசுவமடு பிரதேச சிறுவர்களின் பெயரில் தேசியத் தலைவரின் 51ஆவது பிறந்த நாளையொட்டி தமிழீழ வைப்பகத்தில் அமுதம் சிறுவர் சேமிப்புக்கணக்கில் ஒரு தொகைப் பணம் வைப்புச்செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிகழ்வு பிரதேச அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது. அப்போது மாணவர்களுக்குப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசுவமடு தமிழீழ வைப்பக முகாமையாளர், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புத் தலைவி, கோட்ட மகளிர் அரசியல் துறையினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-402)

# குளக்கட்டின் மீது போக்குவரத்து; தடைசெய்யுமாறு கோரிக்கை

முழங்காவில், நவ 28.

போக்குவரத்திற்கென குளத்தின் அருகிலேயே வீதி உள்ளபோதும் குளக்கட்டின் மீதே ட்ரக்ரர் வாகனங்கள் செல்கின்றன. இதனால் குளக்கட்டிற்குப் பாதிப்பு ஏற்படுவதுடன் பயணிகளும் பெரும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.

ஸ்கந்தபுரம் - வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் உள்ளது மணியன்குளம். இக்குளத்திற்கு அருகில் வீதி உள்ளது. ஆயினும், மக்கள் குளக்கட்டினூடாகவே பயணம் செய்கின்றனர்.

தற்போது குளத்தில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் குளக்கட்டின் மீது போக்குவரத்துச் செய்வது குளம் உடைப்பெடுப்பதற்கு ஏதுவாகிவிடும் என்பதால் இந்தப் போக்குவரத்தை தடுப்பதற்குச் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. (த-323-202)

# பிரதிச் சுகாதாரப்பணிமனை கட்டட நிதி திரும்பும் நிலை

வட்டக்கச்சி, நவ 28

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் அதற்கான நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

'ஜபிக்' திட்டத்தின் கீழ் கடந்த வருடம் இக்கட்டடத்திற்கான கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டது. இதில் கடந்த ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது. ஆனால் இவ்வாண்டுக்கான வேலை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இந்த ஆண்டு வேலைக்கென ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே 4லட்சத்து 50 ஆயிரம் ரூபா திரும்பும் நிலையிலுள்ளதென பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பணிமனைக்கான கட்டடம் பூர்த்தியாகாமையால் குறித்த பணிமனை இடநெருக்கடிக்கு மத்தியிலேயே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. மருந்துக்களஞ்சியமும் பணிமனையில் இயங்கமுடியாததால் உருத்திரபுரம் வைத்தியசாலையில் இயங்கி வருகின்றது. (ஒ-405-202)

# முத்தையன்கட்டு குளத்திலிருந்து வெளியேறும் நீருடன் முதலைகள்

முல்லைத்தீவு, நவ.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பிற்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையே உள்ள பகுதியில் அமைந்துள்ள முத்தையன் கட்டுக்குளத்தில், அண்மையில் ஏற்பட்ட பெருமழைகாரணமாக மீன்களுடன் முதலைகளும் செத்து மிதப்பதைப் பலரும் கண்டுள்ளனர்.

இந்தக் குளம் நிரம்பியதைத் தொடர்ந்து அதன் ஒன்பது நீர் தடுப்புக் கதவுகளும் திறந்து விடப்பட்டன. இவற்றின் ஊடாகப் பாயும் நீருடன் அள்ளப்படும் மீன்களும், முதலைகளும் குளத்துள் உள்ள பாறைகளுடன் மோதுண்டு இறப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காட்சியை அந்தப் பகுதியில் உள்ள வலதுகரை, இடதுகரை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சென்று பார்வையிட்டனர். தற்பொழுது குளத்து நீர் மட்டம் வழமையான அளவிற்கு வந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குளத்தில் முதலைகள் இருப்பதாகவும் கோடைகாலத்தில் சில வேளையில் குளத்தைவிட்டு வெளியேறி அயல் பகுதிகளில் நடமாடும் வழக்கம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ஒ-88)









விசுவமடுப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விசுவமடு மாவீரர் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் நிகழ்வுகளை முதலிரு படங்களிலும் விசுவமடு தமிழீழ வைப்பகத்தில் நடைபெற்ற நிகழ்வை அடுத்த படத்திலும் காணலாம்.

*(படங்கள்:- விசுவமடுச் செய்தியாளர்)*

# உலக வல்லரசுகளுடன்.....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய தேவை அன்று எமக்கு எழுந்தது. இதனால், சந்திரிகா அரசாங்கத்துடன் பேசி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் பெற்றுக்கொடுக்க முடிவெடுத்தோம். நோர்வேயின் அனுசரணையுடன் இரு தரப்புச் சமாதானச் செயலகங்கள் மட்டத்திற் பேச்சுகள் நிகழ்ந்தன. முடிவின்றி, நீண்ட காலத்திற்கு இப்பேச்சுகள் இழுபட்டுச் செல்வதை நாம் விரும்பவில்லை. ஆகையால் நாம் மென்போக்கைக் கடைப்பிடித்து, சில முக்கிய விடயங்களில் நெகிழ்ந்து கொடுத்து, ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதற்கு இணங்கினோம். இதற்கான உடன்பாடும் கைச்சாத்தாகியது.

சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து உருவாக்கிய இந்த நிவாரணக் கட்டமைப்புக்கு அனைத்துலக நாடுகளும் தமது நல்லாதரவை வழங்கின. முரண்பட்டு நின்ற இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படும் நல்லெண்ணச் சூழ்நிலை பிறந்துள்ளதாக நம்பிக்கை தெரிவித்தன. ஆயினும் இந்த நல்லெண்ணச் சூழ்நிலை உருவாகுவதையோ, தமிழருக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதையோ சிங்கள - பௌத்த இனவாதச் சக்திகளாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி நிவாரணக் கட்டமைப்புக்குக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்து அரசிலிருந்து விலக்கிக்கொண்டது. ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிர இனவாதக் கட்சிகள் இந்த நிவாரண உடன்பாடு சிறீலங்கா அரசியலமைப்புக்கு விரோதமானதென உயர்நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்தன. சிங்கள இனவாதச் சக்திகளுக்குச் சார்பான முறையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சுனாமிக் கட்டமைப்பை முழுமையாக முடக்கிச் செயலிழக்கச் செய்தது.

சுனாமிக் கட்டமைப்புக்குச் சாவுமணி அடிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த இறுதி நம்பிக்கையையும் சிங்களப் பௌத்தப் பேரினவாதம் சாகடித்துவிட்டது. சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி சந்திரிகாவினாற்கூட, சிங்கள இனவாதச் சக்திகளை மீறித் தமிழ் மக்களுக்கு ஒரு நிவாரணத் திட்டத்தைத்தானும் நிறைவுசெய்ய முடியவில்லை. நிலைமை இப்படி இருக்கும் பொழுது பேரினவாதச் சகதியில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள அதிகார வர்க்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். சுனாமி நிர்வாகக் கட்டமைப்பானது எந்தவிதமான அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கு உருப்படியான நிர்வாக வலுவும் இருக்கவில்லை. மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒரு தற்காலிக ஒழுங்கமைப்புக்கே தென்னிலங்கையில் இத்தகைய எதிர்ப்பு என்றால் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரமுடைய ஆட்சியமைப்பைச் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசிப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற் கனவு. கடந்த நான்கு ஆண்டுகாலச் சமாதான முயற்சியின் பயனாக நாம் பட்டுணர்ந்துகொண்ட மெய்யுண்மை இது. இந்தச் சமாதான நாடகத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த உலக நாடுகளுக்கும் இந்த உண்மை தெளிவாகியிருக்கும் என்றே நாம் நம்புகிறோம்.

எனது அன்பான மக்களே!

சிங்கள ஆட்சியாளரின் நயவஞ்சக அரசியலுக்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக இன்னொரு பாரதூரமான விடயத்தையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சமாதானத்தின் திரைக்குப் பின்னால், மறைமுகமாக, எமது இயக்கத்திற்கு எதிராக நிகழ்த்தப்படும் ஓர் இரகசிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். எமது விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, எமது போராட்டத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார நிழல் யுத்தம் ஏவிவிடப்பட்டது. எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய போராளிகள், ஆதரவாளர்கள் எமக்கு ஆதரவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என்ற வகையில் பெருந்தொகையானோர் மிகவும் கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது எமக்கு நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத்துறையின் வழிநடத்தலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதும் இதன் பின்புலத்திற் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூப கரங்கள் செயற்படுவதையும் நாம் அறிவோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், அரச படையினரின் பாதுகாப்புக் கவசத்துடன் ஒட்டுப் படைகளான தமிழ் ஆயுதக் குழுக்களை கருவிகளாகக் கொண்டு இந்த மறைமுக யுத்தம் நடத்தப்படுகிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக நின்று அரசியற் பணிகளில் ஈடுபட்ட எமது போராளிகள் கொலை செய்யப்படுவதையும், எமது அரசியற் செயலகங்கள் தாக்கியழிக்கப்படுவதையும் நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். ஆனால், சிங்கள அரசு எமது ஆட்சேபனைகளைப் பொருட்படுத்தவில்லை. இதனால் இறுதியில் எமது அரசியற் போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மீள அழைக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

## மென் தீவிர யுத்தம் தொடுப்பு

போருக்கு ஓய்வு கொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு வித்தியாசமான மென் தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கிறது. போர்நிறுத்த விதிகளுக்கு அமையத் தமிழ்க் கூலிப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு. இந்த முக்கிய கடப்பாட்டை நிறைவுசெய்யத் தவறிய சிங்கள அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவிகளாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க் குற்றமாகும். ஒரு கையால் அரவணைப்பது போல நடித்து மறுகையாற் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலிது. சமாதான முயற்சியிலும் சமரசத் தீர்விலும் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு உண்மையான ஆர்வமும் அக்கறையும் இருக்கவில்லை என்பதையே இச்செயற்பாடு எடுத்துக்காட்டுகிறது. இராணுவ அணுகுமுறையை இவர்கள் இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. சமாதானச் சூழலிலும் ஒரு புதிய வடிவிற் போரை உருமாற்றம் செய்து இராணுவப் பயங்கரவாதத்தைத் தொடர்கிறது சிங்கள அரசு. இந்த நிழல் யுத்தத்தின் நிஜ வடிவத்தையும் அதன் அசிங்கமான முகத்தையும் அந்தரங்க நோக்கத்தையும் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன எல்லாம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அர்த்தமற்ற சொற்பதங்களாக, யதார்த்த மெய்ந்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன. சமாதானச் சூழலில் நிகழ்த்தப்படும் மறைமுக யுத்தம், போர்நிறுத்த விதிகளுக்கு முரணாகத் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, சமரசப் பேச்சுகளைப் பயன்படுத்திப் பின்னப்படும் சர்வதேசச் சதிவலைப் பின்னல் - இப்படியாக அமைதி முயற்சி திரிவுபடுத்தப்பட்டுத் தவறான முறையிற் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எமது மக்களுக்கு எல்லாவற்றிலுமே நம்பிக்கை இழந்துவிட்டது.

நிலையான அமைதியையும் நிம்மதியான வாழ்வையும் பெற்றுத்தராத சமாதானத்தில், வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை அகற்ற முடியாத போர்நிறுத்தத்தில், தீராது தொடரும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடித்தராத பேச்சுகளில், எமது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

நிலையற்ற வாழ்வையும், நிச்சயமற்ற எதிர்காலத்தையும் இனியும் எமது மக்கள் பொறுத்துக்கொள்ளத் தயாராகவில்லை. பொறுத்துப் பொறுத்து பொறுமையிழந்த தமிழ் மக்களின் பொங்குணர்வாகவே அவர்களது அரசியல் அபிலாசைகளின் ஆவேச வெளிப்பாடாகவே தமிழீழத் தாயகமெங்கும் வெகுசனப் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. சமீப காலமாக, தமிழ் மாவட்டங்கள் தோறும் மாறி மாறி அரங்கேறி வரும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுகளிற் சமுத்திரமாக மக்கள் திரண்டெழுந்து உரிமை முழக்கம் செய்து வருகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைகோரி, தம்மைத் தாமே ஆட்சிபுரியும் அரசியற் சுதந்திரங்கோரி, தமிழீழ மக்கள் எழுப்பும் உரிமைக் குரலானது உலக மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ளது. ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக அணிதிரண்டு நிற்கும் தமிழினத்தின் உரிமைக் குரலைச் சர்வதேசச் சமூகம் இனியும் அசட்டை செய்யமுடியாது. தமது அரசியல் தகைமையைத் தாமாகவே நிர்ணயித்துக் கொள்ள எமது மக்கள் விரும்புகிறார்கள். காலங்காலமாக அரச ஒடுக்குமுறைக்கு ஆளாகிய ஒரு தேசிய மக்கள் சமுதாயம் என்ற ரீதியில், தமது அரசியல் அபிலாசைகளைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது மக்களின் அறைகூவலாகும்.

## சுயநிர்ணயத்துக்கான காலம் கனிகிறது

எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பது தான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்துவிட்டது.

தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, அவர்களை அரவணைத்து வாழச் சிங்களத் தேசம் மறுத்து வருகிறது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு, கடந்த 57 ஆண்டுகளாக இந்த அரசியற் புறக்கணிப்புத் தொடர்கிறது. வேண்டப்படாத இனத்தவராக, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறந்தள்ளி வைக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து சலித்துப் போன தமிழர், சிங்கள ஆட்சியமைப்பையும் அதன் அதிகாரபீடத்தையும் ஒதுக்கிப் புறக்கணிக்கத் தீர்மானித்து விட்டனர். சிறீலங்காவின் அரச அதிபர் தேர்தலில், பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாக்களிக்காதமை இந்தப் புறக்கணிப்பின் காத்திரமான வெளிப்பாடாகும். சிங்களத்தின் அரச அதிபரைத் தீர்மானிக்கும் வாக்குப் பலம் இருந்தபோதும் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த எமது மக்கள் விரும்பவில்லை. வேட்பாளர்கள் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அவர்களது கட்சிகள், கொள்கைகள் மீதான தீர்ப்பாகவோ இதனைக் கருதுவது தவறு. ஒட்டுமொத்தமாகச் சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆழமான விரக்தியினதும் நம்பிக்கையீனத்தினதும் வெளிப்பாடாகவே இத்தேர்தல் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது. தமிழரின் அரசியற் போராட்ட வரலாற்றில் இதுவொரு பாரதூரமான திருப்பத்தை சுட்டிக் காட்டுகிறது. சிங்கள அரசியல் ஆட்சிமுறையில் நம்பிக்கையிழந்த தமிழீழ மக்கள், தனிவழி சென்று தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் துணிந்து விட்டனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

சிங்களத் தேசமானது ஒரு புதிய தேசத் தலைவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தத் தலைவனின் கீழ் ஒரு புதிய ஆட்சிபீடம் பதவி ஏறியுள்ளது. இந்த ஆட்சியமைப்பானது பிரத்தியேகமாகச் சிங்களப் பெரும்பான்மை மக்களால், அவர்களது வாக்குப் பலத்தால் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியமைப்பிற் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பங்களிப்பு இருக்கவில்லை. இது முற்றுமுழுதாகவே ஒரு சிங்களப் பௌத்த ஆட்சிபீடமாகும். இதனால் மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வாழ் மக்கள் சமூகங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அவர் சிங்கள - பௌத்த மக்களின் நலனைப் பேணும் அரச அதிபராகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரச அதிபர் மஹிந்தவின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் நாம் நன்கறிவோம். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும் இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம். இவைபற்றி நான் இங்கு ஒப்பீட்டு மதிப்பாய்வு செய்ய விரும்பவில்லை.

## தேர்தல் முடிவு ஆழமான பிளவின் வெளிப்பாடு

சமீபத்திய அரச அதிபர் தேர்தலும் அதனை எமது மக்கள் புறக்கணித்ததால் ஏற்பட்ட ஆட்சிமாற்றமும் தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில், அரசியல் ரீதியாக, ஆழமான ஒரு பிளவை ஏற்படுத்தியுள்ளன. தென்னிலங்கையில், சிங்கள - பௌத்தம் மேலாண்மை பெற்றுள்ள அதே சமயம், தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியம் நிலைப்பட்டு, பலப்பட்டு, எழுச்சிபெற்று வருகிறது. சிங்களத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. தமிழீழத்திலும் தமிழ்த் தேசிய எழுச்சியின் திண்ணிய வடிவமாக எமது விடுதலை இயக்கத்தின் ஆட்சியமைப்பு விரிவடைந்து, வலுவடைந்து இயங்கி வருகிறது.

சிங்கள இராணுவ ஆதிக்கத்திலிருந்து எமது தாயக நிலத்தின் பெரும் பகுதியை நாம் மீட்டெடுத்து, அங்கு தன்னாட்சி அதிகாரமுள்ள ஆட்சியமைப்பை நிறுவி, அதனை நேர்த்தியாக நிர்வகித்து வருகிறோம் என்பது இன்று உலகறிந்த உண்மை. பெருந்தொகை மக்கள் வாழும் நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அதனைக் கட்டிக்காக்க பலம்பொருந்திய படைத்துறையையும் சட்டம் ஒழுங்கைப் பேணக் காவல்துறையையும் நீதித்துறையையும் அத்தோடு ஒரு நிழல் அரசாங்கத்திற்குரிய அடித்தளக் கட்டுமாணங்களையும் கொண்டதாக பிரமாண்டமான நிர்வாக அமைப்பை நாம் இயக்கி வருகிறோம். பெரும் தொகையான எமது மக்கள் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்தபோதும், உணர்வாலும் இலட்சியத்தாலும் அவர்கள் எமது விடுதலை இலட்சியத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்தக் களயதார்த்தத்தை, அரசியல் மெய்ம்மையைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், எமது விடுதலை இயக்கத்தை ஒரு 'பயங்கரவாதக் குழு' என உலகத்திற்குச் சிறுமைப்படுத்திச் சித்திரித்துக் காட்ட முனைந்து வருகிறார்கள். இந்தப் பொய்யான பரப்புரைகளை நம்பி, உலக நாடுகள் சில எமது இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பது எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது. சமாதான முயற்சியின் பாதுகாவலர் என உரிமை கோரி, இலங்கையின் இனப்பிரச்சினையில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய உலக வல்லாதிக்க நாடுகள், ஒரு தரப்பினரான எமது விடுதலை இயக்கத்தைப் 'பயங்கரவாதிகள்' என ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டு, மறுதரப்பினரான சிறீலங்கா அரசின் நலன்களுக்குச் சார்பாக நிலைப்பாடு எடுத்தன. இது பேச்சுகளிற் பங்கு கொண்டோரது சமநிலை உறவை வெகுவாகப் பாதித்தது. அத்தோடு எமது அரசியல் தகைமையை நாமே தீர்மானிக்கும் சுதந்திரத்தையும் பாதித்தது. இந்நாடுகளின் ஒருதலைப்பட்சமான நிலைப்பாடும் குறுக்கீடும் சமாதானப் பேச்சுகள் முறிந்து போவதற்கும் ஒரு காரணமாக அமைந்தன. பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழிதழுவி நிகழும் நியாயமான அரசியற் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிவுபடுத்தப்படுகின்றன. இந்தவகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடிமறைக்கப்படுகிறது. ஆயினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைதான் எமது விடுதலை இயக்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிறது.

## வரலாற்றுத் திருப்பத்தில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம்

நோர்வே நாட்டின் அனுசரணையுடனும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் கடந்த நான்கு ஆண்டு காலம்வரை இழுபட்ட சமாதான முயற்சியின்போது சிங்கள அரச தரப்பினால் ஏற்பட்ட சிக்கல்கள், போடப்பட்ட முட்டுக்கட்டைகள், இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்கள் எல்லாவற்றையுமே உலகம் நன்கறியும். எத்தனையோ இம்சைகள், ஆத்திரமூட்டல்கள் மத்தியிலும் நாம் பொறுமையை இழந்து, சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை என்பதையும் சர்வதேசச் சமூகம் அறியும். நான்கு ஆண்டு கால அமைதிப் பயணத்திற் சமாதானத்தின் மீதான எமது பற்றுறுதியை நாம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துக் காட்டிவிட்டோம்.

எனது அன்பான மக்களே!

எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அணுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய காலத்தை நாம் நெருங்கிவிட்டோம். இந்த வரலாற்றுத் திருப்புமுனையான கட்டத்தில், எமக்கு ஒரு புதிய சவாலாக, சிங்களத் தேசத்தில் ஒரு புதிய அரச அதிபரின் தலைமையில், ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. இந்தப் புதிய அரசு எமக்கு நேசக்கரம் நீட்டுகிறது. எமது விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவிக்கிறது. போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி பேணப் போவதாகச் சொல்கிறது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளையோ அதன் மூலக் கோட்பாடுகளையோ அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரிது. எனினும் அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும், தமிழ்மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்துகொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சிறிது காலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்.

பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து,

(15ஆம் பக்கம் பார்க்க)








*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கல்வியியற் கல்லூரி ஆகிய இடங்களில் நேற்று நடந்த மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள்.*

**(படங்கள்: நேசன், ராஜேஸ்)**

## உலக வல்லரசுகளுடன்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும் போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.

எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், எமது மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த மகத்தான தியாகங்களையும் நினைவுகூரும் இப் புனித நாளில், எத்தகைய இடர்களையும் எத்தகைய துன்பங்களையும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்போமென உறுதிபூணுவோமாக.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

(ஐ)

## மாவீரர்களின் குடும்பங்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன

நல்லூர்,நவ.28

மாவீரர் நாளையொட்டி திருநெல்வேலி வர்த்தகர் சங்கம் இப்பகுதியைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவீரர் குடும்பங்களுக்கு புதிய துவிச்சக்கர வண்டிகளை இலவசமாக வழங்கியது. திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் எஸ்.எழில் மோகன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பங்குத் தந்தை அருட்திரு ராஜ்மோகன் அடிகளார், சங்கத் தலைவர் செ.கஜேந்திரன், இந்து வாலிபர் சங்கத்தின் உபதலைவர் கு.மோகன் ஆகியோர் துவிச்சக்கரவண்டிகளை உரியவர்களிடம் கையளித்தனர்.

(த-11)

## வெளிமாவட்டங்களிலிருந்து வந்த உறவினர்கள் நேற்றிரவே திரும்பினர்!

### — முகமாலைச் சாவடி நள்ளிரவுவரை திறந்திருந்தது! —

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து துயிலும் இல்லங்களிலும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் கல்லறைகளும் உள்ளன. இங்குள்ள துயிலும் இல்லங்களில் துயில்கின்ற தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஏராள மான பெற்றோரும் உரித்துடையோரும் நேற்றுக்காலை அழைத்துவரப்பட்டிருந்தனர். நிகழ்வுகள் நிறைவடைந்ததும் நேற்றிரவே அவர்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

நேற்று நள்ளிரவு 11.30 மணிவரை முகமாலை சோதனைச் சாவடியைத் திறந்து விடுவதற்கு படைத்தரப்பினர் அனுமதி வழங்கி யிருந்தனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்தோருக்கான உணவு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை மாவீரர்தின ஏற்பாட்டுக் குழுவினர் செய்து கொடுத்திருந்தனர். (த-7-14-86-180-410)

## மரண அறிவித்தல்கள்

### வைத்தி இராசையா



வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரம், மணியகாரன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி இராசையா 25.11.2005 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி-நாகாத்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சண்முகநாதன் (ஜேர்மனி), கிருஷ்ணநாதன், நகுலாம்பிகை, கனகாம்பிகை (சுவிஸ்), கேதாரகௌரி(கொலண்ட்), பத்மநாதன் (கனடா), நடேசநாதன் (பிரான்ஸ்), ரதி (கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஸ்பராணி (ஜேர்மனி), விக்னேஸ்வரி, செல்வேந்திரன், இரத்தினசிங்கம் (சுவிஸ்), பஞ்சலிங்கம் (கொலண்ட்), சித்திரா (கனடா), சுவேந்தினி (பிரான்ஸ்), கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலானி (ஜேர்மனி), யாழினி (ஆசிரியர், யா/வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்), காந்தரூபன் (சவுதி), நளினி, அன்பரசன் (யா/வேலணை மத்திய கல்லூரி), நிஷாந்தன், நிதர்சினி (சுவிஸ்), சிவப்பிரியா, பானுப்பிரியா (கொலண்ட்), சிந்துஜா, அஜிந்தன் (கனடா), நதுஷா, நதுஷன், மதுஷன் (பிரான்ஸ்), யதுஷா, சுரேகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), டிசாந், விதுஷன் (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சபாதி, சின்னத்தங்கம், சின்னத்தம்பி மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, முத்தையா, கண்ணம்மா, நாகலிங்கம், சின்னத்தம்பி, அன்னமுத்து, காங்கேசு மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியகாரன் வீதி,*
*5ஆம் வட்டாரம்,*
*வேலணை.*

(43278)
(54-34-12)

**தகவல்:**
**இ. கிருஷ்ணநாதன்**
**(சின்னண்ணை - மகன்).**

### திருமதி கதிரமலை செலஸ்ரீனா



மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலை செலஸ்ரீனா 23.11.2005 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ஜோசப்-அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா-காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கதிரமலையின் (பாலு, சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அன்பு மனைவியும் மனோராஜ் (மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி), சுசில்டா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசிகுமாரின் (பிரதேச செயலகம், மன்னார்) பாசமிகு சகோதரியும் கணேசலிங்கம் ஞானேஸ்வரி (தேவி), சிறிகரன் (மோகன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.11.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, மல்வம் திருக்குடும்ப சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்வம்,*
*உடுவில்.*

(43279)
(54-34-12)

**தகவல்:**
**கதிரமலை (கணவர்).**

## மரண அறிவித்தல்

### திருமதி கலைமகள் மகாலிங்கம் (சித்திரை பூபதி)

சரவணை கிழக்கு, பள்ளம்புலம், வேலணையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைமகள் மகாலிங்கம் அவர்கள் 25.11.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2005) செவ்வாய்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சுண்டுக்குளி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரவணை புன்னன் கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 0779151160*

(43284)
(54-34-12)

**தகவல்:**
**நா. மகாலிங்கம் (கணவர்),**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் *மழை*

*ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல் நடித்த*

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30 , 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த

**குண்டக்க மண்டக்க**

காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00,

அடுத்த வெளியீடு - அர்ஜுன் நடித்த **ஆணை**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**மனோகரா** யாழ்ப்பாணம்





## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் சிங்கராசா



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி கதிரிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சிங்கராசா அவர்கள் 25.11.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம்-ஞானம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் கனீசியஸ் கருணைராசாவின் பாசமிகு தந்தையுமாவார்.

தவராசா, கிறிஸ்ரீனம்மா, டெய்சிறாணி, ஜசிந்தா ஆனந்தராசா (ஜேர்மனி), அமலராசா, அருள்நேசராசா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் செபரத்தினம், லதிஸ்லாஸ், இருதயராசா, வசந்தா, சாமன், மேகலா, வித்தியா, பூமணி, இராசேந்திரம், சிவலிங்கம், ரத்தினம், நாகரத்தினம், தவமணி, திரவியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கோப்பாயில் அவரது தாயாரின் இல்லத்தில் நடைபெற்று, புனித சூசையப்பர் ஆலயத்தில் இறுதி ஆராதனைக்காக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மத்தி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் கட்டை,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(43282)
(54-34-12)

**தகவல்:**
**S.S.செபரத்தினம் (மைத்துனர்),**
**கனீசியஸ் கருணைராசா (மகன்).**

### பொன்னையா மாணிக்கவாசகர்



**(முன்னாள் புகையிரத நிலைய ஊழியர்)**

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மாணிக்கவாசகர் அவர்கள் நேற்று (27.11.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பொன்னையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் சிவசுப்பிரமணியம், சிவராமலிங்கம், சின்னம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற தங்கரட்ணம் அவர்களின் கணவரும் நாகபூரணம், பரமேஸ்வரன், பத்மாவதி, விக்னேஸ்வரன் (கனடா), சந்திரவதனா, உதயகுமாரி, அமரர் ஜெகதீஸ்வரன், ரதீஸ்வரன் ஆகியோரின் தகப்பனாரும் இரகுநாதன், புஸ்பராணி, பரஞ்சோதி, சாந்தலஷ்மி (கனடா), இந்திரகுமார், சிவகணேஸ், குகதேவி ஆகியோரின் மாமனாரும் திருமதி சுதாகரன் (சுவிஸ்), குஷேந்தினி, திருமதி நிஷாந்தினி பாஸ்கரலிங்கம் (லண்டன்), திருமதி விஜித்தா தவனேஸ்வரன் (லண்டன்), டினேஸ் (லண்டன்), துஸ்யந்தன் (சுதன்-மாருதி ஸ்ரூடியோ, கலட்டி), சுபாஜினி, கிருஷாலினி, திவாகரன் (கனடா), வசிகரன் (கனடா), மிதுலா (கனடா), சுஜிகரன் (கனடா), மதன், உஷாந்தன், வினோஜினி, தட்சாயினி, காண்டீபன், நந்தகோபால், நந்தகோபன், லக்ஷன், சாரங்கி, கம்சிகன், ஆகியோரின் பேரனாரும் பவித்திரா, சுமித்திரா, ஷாமினி (லண்டன்) ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
*தொ.பே.:0779103317*

(43280)
(54-34-12)

**தகவல்:**
**பிள்ளைகள்.**

# பிரதான தளபதிகள், பொறுப்பாளர்கள் துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றினர்

கிளிநொச்சி,நவ.28

தமிழர் தாயகப் பகுதியில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் தளபதிகளும் பொறுப்பாளர்களும் நேற்றுமாலை பிரதான சுடர்களை ஏற்றினர்.

சுடர் ஏற்றிய தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களும் மாவீர,ர் துயிலும் இல்லங்களின் விபரமும் வருமாறு:-

**திருகோணமலை**

ஆலங்குளம் - கேணல் சொர்ணம், உப்பாறு - விமல்ராஜ், தியாகவனம் - தளபதி வரன், வெளியபுலம் - தளபதி குணம்.

**மட்டக்களப்பு**

தரவை - மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானு, மாவடி முன்மாதிரி - தளபதி யோகராஜ், தாண்டியடி - தளபதி நாகேஷ், வாகரை, கண்டலடி - திருமலைத் துணைத் தளபதி வசந்தன்.

**அம்பாறை**

உடும்பன்குளம் - தளபதி ஜனார்த்தனன்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு கடற்பரப்பில் - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, முள்ளியவளை - தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் நடேசன், அளம்பில் - கடற்புலிகளின் மகளிர் அணிகளின் தளபதி கலைச்செல்வி, துணுக்காய் - மாலதி படையணித் தளபதி கேணல் விதுஷா, வன்னிவிளாங்குளம் - நில அளவைப் பொறுப்பாளர் சசிகுமார்.

**கிளிநொச்சி**

கனகபுரம் - வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், விசுவமடு - தளபதி கேணல் ரமேஷ், முழங்காவில் - கடற்புலிகளின் தளபதி விநாயகம்.

**மணலாறு**

இதயபூமி - தளபதி மணியரசன், இதய கீதம் - கட்டளைத் தளபதி சுக்கிராங்கன், பள்ளிக்காடு - கேணல் பால்ராஜ்.

**மன்னார்**

ஆட்காட்டிவெளி - கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், பண்டிவிருச்சான் - தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன்.

(ஐ-12-14-70-173-182-352)

# ஏறாவூரில் துப்பாக்கிப் பிரயோகம்

மட்டக்களப்பு,நவ.28

ஏறாவூர், பள்ளியடி வீதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் உள்ள இளைஞர் ஒருவரை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

முகமூடியணிந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இனம் தெரியாத ஆயுத பாணிகள் இரவு 8.00 மணியளவில் இந்த வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

# வெளிநாட்டுத் தூதுவர்களை இன்று சந்திக்கின்றார் மஹிந்த

கொழும்பு,நவ.28

இலங்கைக்கு உதவி வழங்கும் நான்கு இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சந்திக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவார இறுதியில் இந்த சந்திப்பு இடம்பெறவிருந்தபோதும் ஜனாதி பதிக்கிருந்த அதிக வேலைப்பளுவின் காரணத்தினால் அச் சந்திப்பு இன்று வரை பிற்போடப்பட்டது.

இலங்கையின் அமைதி முயற்சிகள் தொடர்பில் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் இன்றைய சந்திப்பின்போது தமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவுள்ளனர்.

ஏற்கனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேச சக்திகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பைக் கடுமையாக விமர்சித்துவரும் நிலையில் இன்றைய சந்திப்பு முக்கியத்துவமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரை வெளியான பின்னணியில் இந்தச் சந்திப்பு மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ஐ-க)

# முக்கிய கூட்டம்

கொழும்பு,நவ.28

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் ஆராய்வதற்கும், எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது பற்றி தீர்மானிப்பதற்காகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முக்கிய கூட்டமொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இ.தொ.கா தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் சௌமியபவனில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது. (க)

# ஆனையிறவு நினைவாலயத்திலும் மக்கள் திரண்டுவந்து அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.28

ஆனையிறவில் முன்னர் சிறிலங்கா இராணுவப் பெருந்தளம் அமைந்திருந்த இடத்தில் நிறுவப்பட்ட பிரமாண்டமான மாவீரர் நினைவாலயத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

காலையில் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கோகுலன் ஏற்றினார்.

பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மாவீரர் ஹைக்கோவின் தந்தை சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வுகளுக்கு வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஸ்ரீகாந்தா ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசியத் தலைவர் மாவீரர் தின உரையைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாலை நிகழ்வுகளுக்கு யாழ்.நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் தலைமை வகித்தார். இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மற்றும் போராளிகள் கலந்துகொண்டனர்.

பொதுமக்கள் வந்து பார்வையிட்டு அஞ்சலி செய்ய வசதியாக இந்த நினைவாலயம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை திறக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-3)

# உடனடியாகப் போர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நேரப்படி நேற்று நள்ளிவு இந்த உரை இடம்பெற்றது.

தமது நீண்ட உரையில் பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

இன்னும் ஒரு மாத காலத்தில் புலிகள் போரைத் தொடங்கப் போகிறார்கள் என்ற அர்த்தத்தில் தலைவரின் மாவீரர் தின உரையை திரிபுபடுத்தி வெளியிட சில ஊடகங்கள் முயற்சிக்கின்றன. போர் எப்போது என்று தலைவர் திட்டவட்டமாகத் திகதி குறிப்பிட்டு எதனையும் கூறவில்லை.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி பற்றி பேசுகிறார். சிங்கள தேசத்தில் அவர் ஒற்றையாட்சியை வைத்திருக்கட்டும். அதுபோல எமது பிரதேசத்தில் நாங்கள் ஒற்றையாட்சியை வைத்திருப்போம்.

அவர் தலைவரை சிநேகபூர்வமாகச் சந்திக்க வரலாம். எமது எல்லையில் வந்து அங்குள்ள நடைமுறைப்படி 'பாஸ்' எடுத்து எமது காவல்துறையினரின் பாதுகாப்புடன்தான் வர முடியும்.

தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தீர்வை மஹிந்த தராவிட்டால் சுயநிர்ணயத்தை வலியுறுத்தி போராட்டத்தை ஆரம்பிப்போம். அதற்கான கால அவகாசம் ஒன்றைத் தலைவர் வழங்கியுள்ளார். ஆனால் அவர் திகதி எதையும் குறிப்பிடவில்லை. போராட்டம் வருடத்தின் ஆரம்பத்தில் அல்லது நடுப்பகுதியில் அல்லது வருட இறுதியில் கூட ஆரம்பிக்கப்படலாம். அதைத் தலைவரே தீர்மானிப்பார்.

எமக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஜனநாயக மீறல் என்று சர்வதேசம் சொல்கின்றது. நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் வசிக்கும் எமது மக்களை அடக்கிவைத்திருப்பது ஜனநாயக உரிமை மீறல் இல்லையா? இதை சர்வதேசம் உணரவேண்டும்.

- இவ்வாறு பாலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

தமிழீழத் தேசிய மாவீரர் தின வைபவங்கள் லண்டன் மாநகரில் நேற்று இரு அரங்குகளில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. வெம்பிளி அரோனா அரங்கில் இடம்பெற்ற மாவீரர் தின வைபவத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர் என்றும் -

அலெக்ஸாந்திரா பலஸில் நடைபெற்ற அடுத்த நிகழ்ச்சியில் சுமார் 7 ஆயிரம் பேர் பங்குபற்றினர் என்றும் அங்குள்ள 'உதயன்' செய்தியாளர் அறிவிக்கின்றார்.

அரோனா அரங்கில் நடைபெற்ற விழாவில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார். லண்டன் நேரப்படி நண்பகல் 12 மணிக்குத் தமிழீழத் தேசியத் தலைவரின் உரை அங்கு ஒளிபரப்பானது.

தமிழீழத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான தலைவரின் உரையை சமகாலத்தில் ரி.ரி.என். தொலைக்காட்சி அஞ்சல் செய்தது. தேசியத் தலைவரின் உரை முடிவடைந்ததும், அரோனா அரங்கில் வீரவேங்கை சுதுவின் தாயார் ரமணி சதானந்தன் சுடரேற்றினார். அதைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்தவர்கள் தமது கைகளில் சிறிய மின் விளக்கை ஏந்தி அக வணக்கம் செலுத்தினர்.

அதன் பின்னர் மலர் அஞ்சலி திருமதி சண்முகசுந்தரம் இரத்தினேஸ்வரி (இரு மாவீரர்களின் தாய்) செலுத்தினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்களின் பாடல்கள் இசைக்கப்பட்டன. லண்டனில் பிறந்து வசித்துவரும் சுசி - தனு சகோதரிகளின் இசையில் 18 பாடல்கள் இதற்கென உருவாக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-3)

# புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடிக்கப்பட்டது . இப்போது ஓய்வு பெறும் காலம் நெருங்கியுள்ளது.

சாந்த கொட்டே கொடவின் பதவி ஓய்வையடுத்து அந்த இடத்துக்கு நியமிக்கப்படவிருக்கும் சரத் பொன்சேகா சிறந்த யுத்த வீரர் எனக் கருதப்படுகின்றார்.

இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்த புலிகளுடனான யுத்தத்தில் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

35 வருடங்களாக இராணுவத்தில் கடமையாற்றிய இவர் 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி ஐந்தாம் திகதி இராணுவத்தில் இணைந்தார். (க)

# யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் தயார்

## வவுனியா மக்களுக்கு வன்னியன்படை அறிவிப்பு

யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதனை ,எதிர்கொள்ள நாம் தயார் நிலையில் இருக்கிறோம். - இவ்வாறு வன்னியன்படை அறிவித்திருக்கிறது.

வன்னியன்படை வவுனியா மக்களிற்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது.

அன்பார்ந்த வவுனியா வாழ் மக்கள் அனைவருக்கும் எம் அன்பு வணக்கங்கள்.

நீங்கள் உங்கள் விருப்பத்துக்கு மாறாக எதிரியின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்கள் உங்களுடைய இந்த வாழ்வு நீண்டதல்ல. எதிரியின் பிடியில் இருந்து மிக விரைவில் நாம் உங்களை மீட்டெடுப்போம்.

எமது போராட்டத்தைப் பலப்படுத்தி எமது மக்களை மீட்டெடுக்க அனைவரும் தயாராகுங்கள். இனவாதிகளுடன் இணைந்து வாழமுடியாது என்ற உண்மையை நீங்கள் அனைவரும் என்று உணர்கிறீர்களோ அன்றுதான் எமக்கு உ்ண்மையான விடுதலை.

ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் ஒன்றை விளங்கியிருப்பீர்கள். இனவாதக்கூட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றிதான் மஹிந்த ஜனாதிபதியாகியது.

சிங்களபேரினவாதிகளின் கூட்டு, சிங்கள மக்களிடம் கேட்பது இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சு நிறுத்தப்படும். சுனாமி பொதுக்கட்டமைப்பு ரத்து செய்யப்படும். ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்படும். என்பது தான் அக்கட்சியின் கோரிக்கையாக இருந்தது.

நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் தமிழர் தாயகத்துக்கான எந்த ஒரு தீர்வையும் ஆதரிப்பவர்கள் அல்லர். தற்போதைய அரசமைப்பிற்கு எதிராகத்தான் எமதுபோராட்டமே முன் எடுத்துச் செல்லப்படுகிறது.

எனவே, இந்த அரசமைப்பிற்குள் தீர்வு காண முற்படும் பேரினவாத அரசுடன் எந்த சமாதானப் பேச்சும் நடத்துவதில் எந்த விமோசனமும் எமக்குக்கிடைக்கப் போவதில்லை.

நாம் போர் வெறியர்கள் அல்லர். சமாதானப்பிரியர்கள். ஆனால், சிங்களப்பேரினவாதம் எம்மீது தற்போது திணிக்கும் பாரிய யுத்தத்தை நாம் எதிர்கொள்ள தயார் நிலையில்தான் இருக்கின்றோம்.

கடற்படை, ஆகாயப்படை, தரைப்படை, கரும்புலிகள் என எமது படைக்கட்டமைப்புகள் அனைத்தும் எமது தலைவர் அவர்களின் கட்டளைக்காக காத்திருக்கின்றன.

அன்பார்ந்த மக்களே! அனைவரும் எமது போராட்டத்தில் இணைந்து எமது மண்ணை மீட்டெடுக்கும் இறுதிப்போரில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை கைவிடாதீர்கள். சந்தர்ப்பம் நழுவிவிட்டால் மீண்டும் திரும்பாது இது எமது மக்களுக்கான ஆணை.

- இவ்வாறு வன்னியன் படை குறிப்பிட்டுள்ளது.

எந்த நிறுவனமும் வழங்கமுடியாத அதிரடிச் சலுகை
IBMS வழங்கும் 2006ஆம் ஆண்டு சிறப்புச் சலுகையைத் தவறவிடாதீர்கள்
மேலதிக விவரங்கள் மிகவிரைவில் உதயனில்
I B M S

# மரண அறிவித்தல்

## நவாலியூர் கந்தையா வில்வராசா (சமூகசேவகர்)

நவாலியூர் கந்தையா வில்வராசா நேற்று ( 27.11.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.10 மணியளவில் சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2005) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-46432) (25-34-13)

புலவர் வீதி, நவாலி.

தகவல்:
ருக்குமணி (மனைவி).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.